விலை 3-00 ரூபா

www.padippakam.com

# ஈழ சுதந்திரன்
ELASUTANTIRAN

திருவள்ளுவராண்டு
உ0உஎ

ஆனி-ஆடி

ஜூலை 1996

புத்தகம்: 9 இதழ்: 8



∴ இந்திய-இலங்கை உடன்பாட்டை மதியாமல் இந்தியாவின் ஆதரவைக் கோரலாமா?

∴ புலிகளைச் சாட்டி தமிழினத்தை அழிப்பது இனச்சிக்கலுக்குத் தீர்வாகுமா?

∴ சிங்கள ராணுவத்தின் மூலம் இலங்கைத் தமிழர்க்கு சமாதானம் கிட்டுமா?

## சந்திரிகாவின் மற்றொரு சதியே

# கதிர்காமரின் டில்லித் தூது

*இந்திய-இலங்கை உடன்பாட்டைக் குப்பையிலே தூக்கிப் போட்டுவிட்டு இந்தியாவின் ஆதரவை சிறீலங்கா எந்த முகத்தோடு கோருகிறது? புலிகளைக் கையைக் காட்டுவதே தமிழின அழிப்பை நியாயப்படுத்தி விடுமா? இனவெறிச் சிங்கள ராணுவத்தின் கையில் தமிழ் மக்களைத் தள்ளி விட்டு, இந்தியாவிடம் தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு ஆதரவு கோருவது என்ன நியாயம்?*

*கதிர்காமரின் டில்லி விஜயம் சந்திரிகாவின் இன்னொரு கபட நாடகமே. தமிழரே தமிழினத்திற்குப் பாதகமாக நடக்க மாட்டார் என்று காட்டி, தமிழினத்திற்கு வஞ்சனை செய்ய இந்தியாவைப் பயன்படுத்திக் கொள்ளவே இதன் மூலம் சந்திரிகா முயற்சி செய்கிறார். இதற்கு இந்தியா துணை போய் விடக்கூடாது என்பதே இலங்கைத் தமிழ் மக்களின் ஒருமித்த எதிர்பார்ப்பு ஆகும்.*

சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சர் லட்சுமண் கதிர்காமர் 20-6-96ஜ அன்று இரண்டு நாள் பயணம் மேற்கொண்டு இந்தியா வந்து சென்றிருக்கிறார்.

இந்தியாவில் திமுகவும் பங்கு கொண்டுள்ள ஐக்கிய முன்னணியின் புதிய இந்திய அரசை, சிறிலங்காவுக்கு ஆதரவாகத்திருப்பும் பொருட்டு கதிர்காமரை சிறீலங்காவின் குடியரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்க தூதனுப்பிவைத்துள்ளார்.

சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சர் என்ற தோரணையில் கதிர்காமர் நடந்து கொள்வதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. "அவர் ஒரு தமிழர் என்கிற முறையில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அவர் மேற்கொள்ளும் நடவடிக்கை தமிழர்க்கு நலம்பயப்பதாகத்தான் இருக்கும்; ஒரு தமிழர் நிச்சயமாகத் தனது இனத்திற்குப் பாதகமாக நடந்துகொள்ள மாட்டார்" என்கிற ரீதியில் இந்தியாவில் அவர் சிறீலங்காவின் நிலைக்கு ஆதரவு தேட முனைந்தது முறையற்றதும், உண்மைக்குப் புறம்பானதுமாகும்.

ஏனெனில், அவருக்கு இலங்கையின் வடக்கு கிழக்கு-தமிழர் தாயகத்தைப் பற்றி எந்த அக்கறையும் கிடையாது. அவர் முற்றிலும் கொழும்பு வாசி. தமிழில் இரண்டொரு வார்த்தைகள் கூடச் சரியாகப் பேசவராதவர். இதற்கு முன்பு தமிழர் சிக்கல் பற்றிப் பேசியவருமல்ல. அப்படியிருக்க அவர் தம்மை ஒருதமிழராகக்காட்டிக் கொண்டு, தமிழினத்திற்குப் பாதகமான சிங்கள பௌத்தப் பேரினவாத அடிப்படையில் அமைந்த சந்திரிகாவின் கொள்கைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் இந்தியாவின் ஆதரவைப் பெற முயன்றது, தமிழின நலனுக்கும், மாந்தநேய உறவுக்கும் முற்றிலும் எதிரானதாகும்.

### சந்திரிகாவின் சாதகமற்ற நிலை

காரணம், இலங்கைத் தமிழர் நலன் பற்றியோ, இந்தியாவின் நல்லுறவு பற்றியோ சந்திரிகா எந்தச் சாதகமான நிலைப்பாட்டையும் மேற்கொள்ளவில்லை.

(1) புலிகளின் தவறுகளைப் பெரிதுபடுத்திப் பிரச்சாரம் செய்தும், (2) தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தை இராணுவ பலம் கொண்டு நசுக்கியும், (3) தான் தலைமையமைச்சராக வர உதவிய நாடாளுமன்றத் தேர்தலின் போதும், குடியரசுத் தலைவர் தேர்தலின் போதும் தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டும், (4) இந்திய - இலங்கை உடன்பாட்டின் மூலம் 'இலங்கையின் வடக்கும் கிழக்கும் தமிழரின் பாரம்பரியத் தாயகம் - இணைந்த தமிழ் மாகாணம்' என்ற ரீதியில் தமிழ்மக்களுக் கிடைத்த நன்மையைக் கூட வஞ்சகமாகப் பறித்து விடும் சதித்திட்டத்தைத்தான் சந்திரிகா தன் புதிய திட்டமாக நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறார்.

ஆனால், இலங்கையை ஒரு பலம் வாய்ந்த சமஷ்டி நாடாக உருவாக்கி, தமிழ்மக்களுக்கு, சிங்கள மக்களுக்கு

(13ம் பக்கம் பார்க்க)

## கல்விக்கண் திறந்த தமிழ்க் கதிரவன்கள்

தெய்வம் வரம் கொடுத்திருந்தும் பூசாரிதான்
தட்டிப் பறித்தார் என்ற கதையைப்போல
உய்வுமிகு எம்.ஜி.ஆர். காலத்தில்தான்
ஓங்கும் ஈழத்தமிழ் அகதி மாணவர்கள்
தொய்வின்றி முன்னேற ஒதுக்கித்தந்த
துலங்குசல்வி இடங்களையே பறித்துக்கொண்ட
வையப்பழி செய்தவர்கள் நாணி நிற்க
வள்ளல்மனங் கொண்டஎங்கள் தமிழினத்தின்

கதிரவனாய், முழுநிலவாய் வெற்றி வானில்
கலைஞர் பிரான், பேராசிரியப் பெருந்தகையும்
புதுவிடிவு தரவந்தார்! கல்விக் கண்கள்
பொலிவுபெறத்திறந்துவைத்தார்! புகழ்சமைத்தார்!
நதிதிரண்ட கடல்திறந்த வெள்ளம் போல
தாங்கள் நன்றிப் பெருக்காலே வணங்குகின்றோம்
கதிமோட்சம் உலகத்தமிழ் இனத்திற்கெல்லாம்
கதிர்-நிலவு இவர்களாலே கிட்டும் உண்மை!

தொண்டுக்குத் தடைபோட்ட இருள் போகட்டும்
சொந்தங்களைச் சிறையிலிட்ட மருள் நீங்கட்டும்
நன்றிக்கு வித்திட்ட அருள் ஓங்கட்டும்
நற்கல்வித் தடையறுத்த கரம் ஓங்கட்டும்
என்றைக்கும் தாய்மனத்தால் நலம் சேர்க்கின்ற
இனமான நல்லாட்சி வளம் ஓங்கட்டும்
பொன்றாத புகழ், வெற்றி, பொருள் ஓங்கட்டும்
புதியபுற நானூற்றைப் படைத்தோங்கட்டும்!

-தமிழீழதாசன்

இலங்கைத் தமிழ் மாணவர்கள்

## தமிழகத்தில் தொடர்ந்து பயில மீண்டும் சலுகை வழங்கப்படும்

### தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அறிவிப்பு

இலங்கைதமிழ் மாணவர்கள் தமிழகத்தில் தொடர்ந்து பயில மீண்டும் சலுகை வழங்க முதல்வர் கலைஞர் உத்தரவிட்டுள்ளார்.

1989-ஆம் ஆண்டு தி மு. கழக ஆட்சி தமிழகத்திலே நடைபெற்றபோது இலங்கை அகதிகளின் குழந்தைகள் உட்பட இலங்கை மாணவர்கள், தமிழகத்திலே தொடர்ந்து கல்வி பயில ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த ஆணையின்படி மருத்துவக் கல்லூரியில் இருபது மாணவர்களும், பொறியியல் கல்லூரியில் நாற்பது மாணவர்களும், வேளாண்மைக் கல்லூரியில் பத்து மாணவர்களும், பாலிடெக்னிக்கில் நாற்பது மாணவர்களும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் படிப்பதற்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(14ம் பக்கம் பார்க்க)

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

படிப்பகம்

www.padippakam.com

''தீய செயல்செய்வார் ஆக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல-தீயன
நல்லன ஆகாவாம் நாவின் புறம்நக்கிக்
கொல்லும் கவயமாப் போல்'' —நீதிநெறி விளக்கம்

(தீயசெயல்களைச் செய்வோருக்கு, ஒருகால் பொருள் [illegible]ர்ந்தாலும், தீச்செயலால் சேர்த்த அப்பொருள் முழுவதும், நாவினால் இன்பம் உண்டாக நக்கிப் பின்னர்க் கொல்லுகின்ற காட்டுப் பசுவைப்போலத் தீமைதருமேயன்றி வேறாகா. ஏனெனில் தீய செயல்கள் எப்போதும் நல்ல செயல்கள் ஆகமாட்டா.)

# தெளிவு

## யாழ் நூலகமும் நகரப் புனரமைப்பும்

சிங்களப்பேரினவாதத்தால் தீக்கிரையாக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தை மீண்டும் உருவாக்கவும், சிங்கள இனவெறி ராணுவத்தாக்குதல்களால் சிதைந்துவிட்ட யாழ் நகரைப் புனரமைக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ''அதற்கு உலக நாடுகள் தாராளமாக உதவ வேண்டும்'' என, சிங்கள பௌத்தப்பேரினவாதச் சிறீலங்கா ஆட்சியின் குடியரசுத்தலைவர் சந்திரிகா உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இத்திட்டம் சிங்களர் தமிழர் நல்லுறவுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் பசப்பியிருக்கிறார்.

யாழ் நூலகக் கட்டடத்தைப் புதிதாக உருவாக்கிவிட முடியும். ஆனால் எரித்துச்சாம்பலாக்கப்பட்ட ஈழத்தமிழரின் வரலாற்றுப் புதையல்கள், பழம்பெரும் சுவடிகள் மீண்டும் எங்கிருந்து கிடைக்கும்? அந்த வரலாற்று ஆதாரங்களை அழித்துவிட்டு, கட்டடத்தை மட்டும் மீண்டும் எழுப்புவது என்பது உலகை ஏமாற்றுவதன்றி, வேறென்ன?

அதைப்போலவே எண்ணரிய தமிழ் உயிர்களைப் பலி கொண்டு விட்டு, தொன்று தொட்டு வளர்ந்து வந்த யாழ் நகரின் தமிழ்நாகரிகத் தோற்றத்தைச் சிதைத்து விட்டு, சிங்கள ராணுவ அதிகாரிகளின் விருப்பப்படி அந்நகரைப் புதுப்பிப்பதென்பதும் தமிழினத்தையும், உலகத்தையும் ஒருங்கே ஏமாற்றுவதே யாகும்.

ஏனெனில், ஏற்கனவே சிங்கள ஆட்சியாளரால் தொல்பொருள் ஆய்வு என்ற பெயரால் தமிழ்ப்பகுதிகளைச்சிங்களப் குதிகளாக்க காட்டும் திட்டமிட்ட சதிகளே அரங்கேற்றப் பட்டிருக்கின்றன.

அதே சதிகளை மீண்டும் அரங்கேற்ற தமிழர்களின் பெயரால் உலக நாடுகளின் உதவிகளைக்கோரிப்பெறுவது தான் சந்திரிகாவின் புதுத் திட்டமே தவிர, வேறல்ல.

எனவே, இதை அம்பலப்படுத்த வேண்டியது தமிழர்களின் கடமையாகும்.

### இது எப்படி இருக்கிறது?

## புலிகளால் வந்த கிலி தீர்ந்தபாடில்லை

இலங்கையில் ஓடும் வாகனங்களுக்கு முன்பகுதியில் இரும்பினால் ஆன பாதுகாப்பு கவசங்கள் பொருத்துவது, தடை செய்யப்பட்டிருக்கிறது.

வாகனங்களில் வர்ணக் கண்ணாடிகள் பொருத்துவதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு காரணங்களுக்காக இவ்வாறாண கண்ணாடிகளை அகற்ற உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இந்த உத்தரவை மீறிய பெரும் எண்ணிக்கையிலான வாகன சாரதிகள் மீதும்,உரிமையாளர்கள்மீதும்நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

தற்போது பாதுகாப்பு கவசங்களையும் எடுத்துக் விட்டு வாகனங்களை ஒட்டுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

புலிகளால் அரசுக்கு இருக்கும் கிலிதான் இதற்குக் காரணம் எனப் பேசிக் கொள்கிறார்கள் மக்கள்.

(— ஆர்-ஆர்)

# கலைஞரே ஈழத்தமிழரின் விடியல் உங்கள் ஆட்சியில் ஏற்படவேண்டும்

### அகதிகள் சிக்கலை விளக்கி தமிழக முதல்வருக்கு ஓர் அகதியின் கடிதம்

இலங்கைத் தமிழ்மக்கள் வாழ்விலே விடியல் என்பது கலைஞர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட வேண்டும் என்று கோரி அழியாநிலை அகதிமுகாமிலிருந்து முத்துக்குமாரசாமி என்பவர் தமிழக முதலமைச்சருக்கு ஓர் கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது;

வணக்கம். உங்கள் தலைமையில் திராவிடமுன்னேற்றக் கழகம் பதவியேற்றுள்ளதை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். ஈழத்தமிழர்பால் அளவுகடந்த பாசமும் அன்பும் நீங்கள் வைத்திருப்பதை அனைவரும் அறிவார்கள். ஈழத்தமிழர்களுக்கு சிறீலங்கா அரசு எந்தக் காலத்திலும் தாமாக முன்வந்து உரிமைகளை வழங்கி அரசியல் தீர்வினை ஏற்படுத்தப் போவதில்லை. எனவே, இந்திய நடுவண் அரசினர் தலையீடு அவசியமாகிறது. இத்தத் தலையீட்டினை ஏற்படுத்த தமிழ் நாட்டின் பங்களிப்பு மிகவும் அவசியமானதும், முக்கியமானதுமாகும். இந்தியாவின் அனுமதியின்றிஎந்த மூன்றாவது நாடும் இவ்விசயத்தில் தலையிடாது. இது வரலாற்று உண்மை.

எம்முடைய பிரச்சினையை முற்றும் முழுவதுமாக உணர்ந்தவர்கள் நீங்கள். எனவே, இதை விரிவுபடுத்தி எழுத வேண்டிய அவசியமில்லை. எனினும் சில விசயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவற்றில் சில உடனடியாகவும், சில ஆராய்ந்தும் நடவடிக்கை எடுக்கவேண்டியவையாகும்.

### உடன் நடவடிக்கைக்கு உரியவை

1) ஈழத்தமிழர் புனர்வாழ்வுக்கென தனிச்செயலர் நியமிக்கப்பட்டு தங்கள்அமைச்சகத்தின் கீழ் கொண்டு வரப்படவேண்டும். முடியுமானால் தனி அமைச்சகத்தையே நிறுவலாம்.

2) ஈழ அகதிகள் பெறும் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டும். இன்று வழங்கும் உதவித்தொகையையும் வாழ்க்கைச் செலவையும் ஆராய்ந்து நடவடிக்கைஎடுக்க வேண்டும்.

3) தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களை புனரமைப்புச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள முகாம்களை மாவட்ட ரீதியாக ஆராய்ந்து குடில்கள் புனரமைப்பு, குடிதண்ணீர், மின்சாரம், கழிப்பறை போன்ற விசயங்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

4) கல்வி விசயத்தில் அகதிகள் கல்வி கற்பது கட்டாயமாக்கப்பட வேண்டும். தொடக்கப்பள்ளி தொடக்கம் உயர்நிலைப் பள்ளிவரை தடங்கல்கள் இல்லாமல் அனுமதி கிடைக்கச் செய்யவேண்டும். மேற்படிப்புக்கு தகுதியுடையவர்களுக்கு மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற துறைகளில் சில இடங்களை அகதிகளுக்கு ஒதுக்கித் தரவேண்டும் எம்.ஜி ஆர். ஆட்சியில் இப்படியான சலுகைகள் வழங்கப் பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது. மேலும்

### மறு விசயங்கள்

1) இலங்கையில் இனப் பிரச்சினைக்கு தமிழ் ஈழமே நிரந்தரமான தீர்வாகும். ஆனால் பலகாரணங்களுக்காக இத்தீர்வினை நீங்கள் வற்புறுத்த முடியாத நிலையில் உள்ளீர்கள். எனவே ஒரு அர்த்தமுள்ள கூட்டாட்சியை ஏற்படுத்தித் தரவேண்டும். வெளிப்படையாகக் கூறினால் பிரிந்து போகும் உரிமையுள்ள சமஷ்டி அரசியலமைப்பை ஏற்படுத்தித் தரவேண்டும்.

2) ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தம் இன்றும் ''உயிரோடு இருக்கிறது'' அதை ஏற்றுக் கொண்ட சிறீலங்கா அரசுக்கு சில கடமைப்பாடுகள் உண்டு என்ற நிலைப்பாட்டினை வலியுறுத்த வேண்டும்.

3) இலங்கையில் சிங்கள -தமிழ் பிரச்சினை ஒரு உள்நாட்டுப்பிரச்சினை அல்ல என்பதையும், இலங்கையில் தமிழர் அல்லல்படும்போதுஇந்திய -தமிழ்நாட்டின் உணர்வலைகள் பாதிக்கப்படுகிறதென்பதையும், அகதிகள் வருவதினால் பொருளாதாரப் பளுவும் உண்டென்பதையும், சிறீலங்கா அரசை உணரச் செய்ய வேண்டும். பொதுவாக உலகினில் வாழும் தமிழர்களின் தாயகம் தமிழ்நாடு சகித்துக் கொண்டு கைகட்டி மௌனியாக இருக்க முடியாதென்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

4) இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வினை ஏற்படுத்திய பின்பே ஈழத் தமிழ் அகதிகளை நாடு திரும்ப அனுமதிக்க வேண்டும். இவ் விசயத்தில் நிர்ப்பந்தம் எதையும் ஏற்படுத்தக்கூடாது.

5) இதைவிட சேதுசமுத்திரத்திட்டத்தை கிடப்பில் போடாது நடைமுறைப்படுத்த மத்திய அரசைத் தூண்ட வேண்டும்.

இத்துடன் நிறுத்தப்பட்டுள்ள யாழ்ப்பாணம் பலாலி-திருச்சி விமான சேவை உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எமது கோரிக்கைகளை நிறைவேற்ற ஏற்ற நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுண்டு. தங்கள் ஆட்சிக்காலத்தில் எமக்கு விடியல் ஏற்பட வேண்டும்.

இவ்வாறு, புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியை அடுத்த அழியா நிலை இலங்கை அகதிமுகாமைச் சேர்ந்த க. முத்துக்குமாரசாமி விடுத்துள்ள கடிதத்தில் கோரியுள்ளார்.

## பொறியியலாளர் குழு யாழ். பயணம்

யாழ் சுன்னாகம் மின் இணைப்பு நிலையத்தை திருத்தியமைப்பது தொடர்பான நடவடிக்கைகளை கவனிப்பதற்கென இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் குழு ஒன்று யாழ் சென்றுள்ளது.

அந்த மின் இணைப்பு நிலையத்தை திருத்த ஏற்படும் செலவு தொடர்பான அறிக்கையை கூடிய விரைவில் நாம் கேட்டுள்ளோம். அதனை திருத்தி மீண்டும் செயற்பட வைக்கும் வரை மின்சாரம் வழங்க ஜெனரேட்டர்களை தந்து உதவுமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார் என்று மின்சக்தி பிரதியமைச்சர் அத்துல நிமலசிறி ஜயசிங்க தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிகள் அனைத்திற்கும் மின்சாரம் வழங்குவதற்கு பெருந்தொகையான ஜெனரேட்டர்கள் தேவைப்படும். அவற்றை கொள்வனவு செய்ய பெருந்தொகையான பணமும் தேவைப்படும். ஆகையால் வெளிநாட்டு உதவிகள் மூலம் ஜெனரேட்டர்களை பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ளோம்

மின்சாரசபை 80 ஆயிரம் மின்சார தந்திக் கம்பங்களை கொள்வனவு செய்யவிருக்கிறது. அவற்றில் 50 ஆயிரம் தந்தி கம்பங்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

யாழ் நகரப் பகுதியில் உடனடியாக மின்சாரத்தை வழங்க ஏற்படும் செலவினம் குறித்தும் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தமிழர் பிரச்சினை: இந்தியாவின் தலையீடு எவ்வாறு அமையப் போகிறது?

- கேயபார் -

இலங்கை யாழ்ப்பாணத்தில் இன்று அமைதி திரும்பி விட்டதாகவும், இரண்டரை இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இராணுவத்தின் உட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதாகவும், இராணுவத்தினர் தமிழ் மக்களுடன் மிகவும் அபிமானத்துடனும் அக்கறையுடனும் நடந்து கொள்வதாக வும் இலங்கையில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இதேபோல் உடனடியாக அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும், மக்களுக்கு அன்றாடத் தேவையான பொருட்களையும் வழங்குவதற்கும் அரசு முயன்று வருகின்றது.

யாழ்ப்பாண மண்ணில் விதைக்கப்பட்ட கண்ணி வெடி களும், இராணுவத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதங் களும் அகற்றப்படாத, அகற்ற முடியாத நிலையில் அரசாங் கம் அவசர அவசரமாக அங்கு மக்களை அழைத்து மக்கள் தம் சொந்த இடங்களுக்கு திரும்பி விட்டதாகவும், அங்கு அவர்களுக்குத் தேவையான அன்றாட உணவுப் பொருட்கள் மற்றும் பொருட்கள் வழமை போல் கிடைப்பதாகவும் உலக நாடுகளுக்கு காட்டும் ஒரு வித மாயத்தோற்றத்தினையே தற்போது ஏற்படுத்தியுள்ளது.

இதன் ஆரம்ப கட்டம்தான் அரசு உள்ளூர், வெளியூர் பத்திரிகையாளர்களை தம் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி களுக்கு மட்டும் சில நிபந்தனைகளுடன் அழைத்துச் சென்றுள்ளது.

அங்கு பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திப்பதற்கோ, சேத மடைந்த இடங்களைப் புகைப்படம் எடுப்பதற்கோ பத்திரி கையாளர் அனுமதிக்கப்படவில்லை. இதன் மூலம் கூட உண்மையான யாழ் நிலைமை வெளிஉலகிற்கு மறைக்கப் பட்டு விட்டது.

அங்கிருந்து சிலர் வந்து இதுபற்றிக் கூறுகையில் விடு தலைப்புலிகளுக்குப் பயந்தோ இராணுவத்தினருக்கு அடி பணிந்தோ நாம் யாழ்ப்பாணத்துக்குப் போகவில்லை. நாம் இருக்கும் சில காலங்களிலாவது எமது மண், எமது வீடு, என்ற இடத்தில் இருந்து நாம் சாகவேண்டும் சாப்பிடுவதற்கு சாப்பாடு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. எவ்வளவு காலத்துக்குத்தான் நாம் இன்னொரு குடும்பத்துடன் தங்கி இருந்து வாழ முடியும்? எனவே எமது வீட்டில் நாம் இருப் பதே மேல். இதன் காரணமாகவே நாம் யாழ் திரும்பி இருக்கிறோம்.

விடுதலைப் புலிகளின் உட்டுப்பாட்டின் கீழ் வட பகுதி இருந்த போது இராணுவத்தினரின் ஷெல் வீச்சுக்கும், விமானத்தாக்குதலுக்கும்தான் பயந்து கொண்டிருந்தோம். ஆனால் இப்போது பல வழிகளில் பயந்து கொண்டிருக் கிறோம். இலங்கை இராணுவத்தினரைப் பற்றி தெரியாத வர்கள் நாங்கள் அல்ல என்றும் அங்குள்ள மக்கள் நமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துகிறார்கள்.

ஆனால் அரசாங்கம் யாழ்ப்பாணம் உட்பட குடாநாடு ராவும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வந்ததையிட்டு இனப் பிரச்சனைத் தீர்வையே மறந்து விட்டார்கள் போல் அவர் களது நடவடிக்கைகள் அமைந்துள்ளது முதலாவதாக யாழ்ப் பாணத்துக்கு செல்வதற்கு அனுமதி கேட்ட தமிழ்கட்சிகளது கோரிக்கைகள்அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் ஒரு அங்கமான வெண்தாமரை இயக் கம் அவசர அவசரமாக யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப் பட்டது.

மற்றும் அங்கு உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசு கங்கணம் கட்டி நிற்கிறது.

இது போன்ற பல நடவடிக்கைகள் காரணமாக அரசாங் கம் கடந்து போன ஆண்டுகளையும், நிகழ்வுகளையும் மறந்து போய் எதுவுமே இந்த நாட்டில் நடவாதது போல வும், எந்தப் பிரச்சனையுமே இந்த நாட்டில் இல்லாதது போலவும் நடந்து கொள்ளப் பார்க்கிறது.

காலம் காலமாக மாறுபட்ட அரசாங்கங்களினால் அடி பட்ட மக்களும், அரசியல் கட்சிகளும், போராளிகள் இயக்கங் களும் ஏன் உலக நாடுகளுமே இதனை மறந்து போக மாட்டார்கள்.

தற்செயலாக அரசு எதிர்பாராத விதமாக அடைந்த வெற்றியை வைத்துக்கொண்டு தன்னிச்சையாக பல முடிவு களை எடுப்பது அரசியல் அணுகுமுறையில் அனுபவம் இல்லாததையே எடுத்துக்காட்டும்.

குடாநாடு முழுவதையும் இராணுவத்தினரால் தொடர்ந் தும் தக்க வைத்துக் கொண்டிருக்க முடியுமா? என்பது கேள்விக்குறியே.

பேராசை பெருநட்டம் என்பதைப் போல அரசாங்கம் அளவுக்கதிகமாக ஆசை கொள்வதை விட்டுவிட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி அரசியல் கட்சிகளுடன் ஆலோ சனை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்க் கட்சிகளையோ, விடுதலைப்புலிகளையோ ஓரம் கட்டி விட்டு தமிழர் பிரச்சனையை தீர்த்து வைக்கலாம் என்று அரசாங்கம் நினைத்தால் விளைவுகள் வேறுமாதிரி யாகக் கூட அமையலாம்.

தமிழ் மக்கள் தற்காலிக ஓய்வுக்காக தமது இருப்பிடங் களுக்கு திரும்பி இருக்கிறார்கள் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளின் எதிர் நடவடிக்கைகள் குடாநாட்டுக் குள் அவ்வளவாக இல்லாத நிலையில் குறி நிலையில் இருக்கலாம்.

ஆனாலும் மீண்டும் விடுதலைப் புலிகளின் தாக்குதல் கள் இராணுவத்தினர் மீது கொடுக்கப்படும் போது பலியா கப்போவது அப்பாவி மக்கள்தான். ஆனால் அதன் விளை கள் விமானத் தாக்குதல்களையும், ஷெல் தாக்குதல்களை யும் விட மோசமாகக்கூட இருக்கலாம்.

எனவே அரசாங்கம் மீண்டும் மக்களை கொல்லும் நடவடிக்கையை விட்டுவிட்டு அவர்களையே அவர்கள் ஆளும் உரிமையை விட்டு விட வேண்டும்.

தமிழ்க்கட்சிகளும் போராளிகள் இயக்கங்களும் தமிழ் மக்கள் மேல் அக்கறை கொண்டு இனியும் காலம் தாமதிப் பதை விட்டு விட்டு ஒருமித்த ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

ஈழத் தமிழர்களின் மேல் அக்கறை கொண்டுள்ள தமிழ் நாட்டு அரசாங்கத்துடனும் மத்திய அரசாங்கத்துடன் தற் போதைய நிலயை எடுத்துக் கூறி இத்தகைய ஒரு சந்தர்ப் பத்தை ஈழத்தமிழர்களின் பிரச்சனைத் தீர்விற்காகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

இதிலும் சுயநலம், மற்றும் தற்காலிக தீர்வுகான என்ற நோக்கமும் இருக்காமல் எல்லோரும் ஒருமித்த நோக்கத் தோடு ஒரே மேசையில் அமர்ந்து ஈழத்தமிழர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண முன் வரவேண்டும்.

இந்திய நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமையும்தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றமும் இலங்கை அரசை சற்றுச் சிந்திக்க வைத்துள்ளது.

எனவே இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நல்ல தீர்வு காண அனைவரும் முற்பட வேண்டும், முன்வருவார்களா?

---

## வடக்கில் பரீட்சைகள் ஒத்திவைப்பு

வடக்கில் 'ரிவிரெச' இரா ணுவ நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டதால் தடைப்பட்ட க.பொ.த.(சா,தா) மற்றும் ஐந்து ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றை எதிர் வரும் ஜூலை மாதம் இரண் டாம் வாரமளவில் நடத்துவ தற்கு தேவையான நடவடிக் கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக பரீட்சைஆணையாளர்நாயகம் காமினி குமரத்ன தெரிவித் தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் மொத்தம் 242 பரீட்சை நிலை யங்களில் கடந்த டிசம்பர் மாதம் க.பொ.த. (சா.தர) பரீட்சை நடைபெறவிருந்த போதிலும் அப்போது ரிவிரெச இராணுவ நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதால் இப்பரீட் சையை பின் போட நேர்ந் தது.

எனினும் தற்போது இப் பரீட்சையை எதிர்வரும் ஜூலை மாதம் நடத்தி ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் பரீட்சை முடிவுகளையும் வெளி யிட பரீட்சைத் திணைக்களம் தேவையான ஒழுங்குகளை மேற் கொண்டு வருகின்றது என்ற அவர் மேலும் தெரிவித் தார்.

அவ்வாறே ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட் சையையும்நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## திருமலை வர 24 மணி நேரம் கப்பல் பயணம்

### உணவும் இல்லை; உபசரிப்பும் கிடையாது!

காங்கேசன்துறை துறை முகத்தில் இருந்து திருகோண மலைக்கு கப்பலில்வரும் வட பகுதி பயணிகள் பெரும்சிரமங் களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் பயணத்தில்24மணி நேரத்தை கப்பலில் செலவிடும் பயணிகளுக்கு கப்பலில் உணவு எதுவும் கிடைப்பதில்லை. சிற் றுண்டி வகைகள் கூட விற்கப் படுவதில்லல. குளிர்பானம் மட்டும் வழங்கப்படுகிறது. இதனால் நோயாளர்கள் வயோதிபர்கள், சிறுகுழந்தை கள் பெரிதும் கஷ்டமுறு கின்றனர்.

கப்பலில் பயணம் செய்யும் பயணிகள் மாலை5 மணிக்கு காங்கேசன்துறை துறைமுகத் தில் கப்பலில் ஏற்றப்படுகிறார் கள், பின்னர் அக்கப்பல்7 மணி யளவில் கடலில் மத்திய பகுதிக்கு கொண்டு செல்லப் பட்டு தரித்து நிறுத்தப்படு கிறது.

மறுநாள் அதிகாலை 3 மணிக்கு திருகோணமலையை நோக்கி கப்பல் புறப்பட்டு மாலை5மணிக்கே திருகோண மலை துறைமுகத்தை இக்கப் பல் வந்தடைகிறது.

வடபகுதியில் இருந்து நோயாளர்கள் கொழும்பு மற்றும் தென்பகுதிகளில் கடமையாற்றும் அரசு ஊழியர் கள், உயர்கல்வி கற்பதற்கு கொழும்பு வருவோர் ஆகியோ ருக்கு மட்டுமே தற்போது யாழ் குடா நாட்டில் இருந்து வெளி யே வர படையினரால் அனு மதி வழங்கப்படுகிறது.

இவர்களே கப்பலில் திரு மலை வருகிறார்கள்.

---

### பெண்கள் புரட்சி

தைவான் நாட்டில் ஆண் களின் ஆதிக்கம் அதிகம் இருக் கிறது; எல்லாவற்றிலும் ஆண் களுக்கே அதிகம் சலுகை காட் டப்படுகிறது. புகைவண்டி நிலையத்தில்கூட பெண்களுக் குப் போதிய கழிப்பறைகள் ஓய்வறைகள் இல்லை. இதைக் கண்டித்து, தைவான் நாட்டுக் கல்லூரி மாணவிகள் அண்மை யில் ஒரு நூதனப் போராட்டத் தில் இறங்கினார்கள்; ஆண் கள் ஓய்வறையிலும், கழிப் பறையிலும் போய்ப் புகுந்து அமர்க்கப்படுத்தி விட்டார்கள்.

### உயிரைக்குடித்த சாதனை!

அமெரிக்காவில் உள்ள சான் பிரான்சிஸ் கோவைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமி ஜெசிகா என்பவள் 11·000 கி.மீ. தூரத்திற்கு விமானம் ஓட்டிச்சாதனை படைக்கத் துடித்தாள் அவ்வாறே பறந்த அவள். தன்னோடு வந்த பயிற்சியாளரோடும், தந்தை யாருடனும் விமானம் புயலில் சிக்கியதால் மாண்டு போனாள்.

படிப்பகம்

# இலங்கை: தமிழர் - சிங்களர் ஒரு வரலாற்றுப் பின்னணி

தொகுப்பு : முனைவர் அரு. கோபாலன்

## 4. குடிசனப் பரம்பலில் தமிழர்க்குப் பாதகம்

பூர்வீகத் தமிழர்கள் பகுதியில் குடியேறி, அதன் மூலம் சட்டப் பூர்வக் குடிகளாகி விட்டதனால் ஏறத்தாழ ஒருலட்சம் பேருக்கு மேல் மலையகத் தமிழர்கள், பிரசாவுரிமை பெற்ற ஏனையத் தமிழர்களைப் போல இந்தியாவுக்கு வந்துபோகும் வசதியையும் பெற்றனர்.

ஏன்; 1990ல் ஈழத்தமிழர்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்தபோது அவர்கள் மத்தியில் வாழ்ந்த மலையகத் தமிழர்களும் ஏராளமானபேர் இந்தியாவுக்கு வந்துள்ளனர். இன்று தமிழ் நாட்டிலுள்ள எல்லா இலங்கைத் தமிழ் அகதி முகாம்களிலும் மலையகத் தமிழர்களும் கணிசமாக வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

ஆக இன்றைக்கு மலையகத் தமிழர்—பூர்வீகத்தமிழர் என்ற வேறுபாடெல்லாம் நடைமுறையில் கிடையாது என்தே மெய்யாகும். இன்று இலங்கையில் தமிழர்களுக்கு வந்திருக்கின்ற ஆபத்து சிங்களப் பேரினவாத அரச பயங்கரவாதத்தின் காரணமாக வந்திருப்பதேயன்றி மலையகத் தமிழர்—பூர்வீகத் தமிழர் பிணக்கால் வந்ததல்ல என்பது உறுதியாகும்.

அதைப்போலவே இஸ்லாமியத் தமிழர் ஏனையத் தமிழர் பூசல் என்று சொல்லி அதற்கும் யாழ்ப்பாணத் தமிழர் மீதே பழிபோடுவதைச் சிலர் வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கும் வரலாற்றில் 1915ல் நடந்து விட்ட ஒரு நிகழ்வு பூர்வீகத் தமிழர் தலைமையைப் பொறுப்பாக்குவதை நாம் மறுக்கவில்லை.

ஆனால், அப்போதும் இஸ்லாமியர்—சிங்களவர் கலவரத்தைச் சாக்காக வைத்து, வெள்ளையராட்சி சிங்கள மக்களுக்கு எதிராக மேற்கொண்ட அடக்கு முறையை விலக்கத்தான் சர். பொன். இராமநாதன் முயன்றாரேதவிர, இஸ்லாமியருக்கு எதிராக அவர் எதையும் செய்யவில்லை. அதே வேளை சிங்களரை விடத் தமிழ் பேசுவோர் என்ற முறையில் இலங்கை முஸ்லிம்களே தமிழர்களின் அதிக பாசத்திற்கும் பற்றுக்கும் உரியோர் என்பதை மறந்து அவர் செயல்பட்டிருக்கக் கூடாதுதான்.

என்ன செய்வது! ''கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்'' என்பதுதான் தமிழ்த் தலைமைகளின் வழமையாக இருந்திருக்கிறது. ஏனெனில், சர். பொன். இராமநாதனின் நடவடிக்கையால் எந்தச் சிங்கள இனம் நலம் பெற்றதோ, அதே சிங்கள இனம்தான் பிற்பாடு அதே இஸ்லாமியத் தமிழர்களை ஏனையத் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டிவிடவும் அதைப் பயன்படுத்திக் கொண்டது.

குறிப்பாக இலங்கையில், உள்ள தமிழ்பேசும் இஸ்லாமியரில் 60விழுக்காட்டினர். சிங்களப் பகுதியில் வாழ்வதைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்ப்பகுதியில் வாழும் 40விழுக்காடுஇஸ்லாமியரை ஏனையத் தமிழர்களோடு ஒன்றவிடாது செய்யும் பிரித்தாளும் சூழ்ச்சியை சிங்களப் பேரினவாதம் கையாளுகிறது.

இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களின் குடித்தொகைப் பரம்பலைப் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்பேசும் மக்களைச் சிங்களப் பேரினவாத அரசு எப்படி ஆட்டுவிக்கிறது என்பதைப் பின்வரும் அட்டவணை புலப்படுத்தும்:

### 1981ம் ஆண்டு புள்ளி விவரம்

| வரிசை | மாவட்டம் | முஸ்லிம்கள் | தமிழ் பேசும் (சோனக) முஸ்லிம்கள் | மாவட்ட மக்கள்தொகையில் சோனகரின் விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| 1. | கொழும்பு | 168,956 | 161,481 | 8.3 |
| 2. | அம்பாறை | 161,754 | 140,461 | 41.6 |
| 3. | கண்டி | 125,646 | 112,052 | 9.9 |
| 4. | மட்டக்களப்பு | 79,662 | 79,317 | 24.0 |
| 5. | திருகோணமலை | 75,761 | 74,403 | 29.0 |
| 6. | குருநாகல் | 64,231 | 61,342 | 5.1 |
| 7. | களுத்துறை | 62,781 | 61,706 | 7.5 |
| 8. | புத்தளம்ஃஃ | 50,246 | 47,959 | 9.7 |
| 9. | கம்பகா | 47,850 | 38,607 | 2.8 |
| 10. | அனுராதபுரம் | 43,801 | 41,833 | 7.1 |
| 11. | கேகாலை | 36,548 | 34,832 | 5.1 |
| 12. | மன்னார்ஃ | 30,079 | 28,464 | 26.6 |
| 13. | பதுளை | 28,759 | 26,808 | 4.2 |
| 14. | மாத்தளை | 26,603 | 25,836 | 7.2 |
| 15. | காலி | 26,359 | 25,896 | 3.2 |
| 16. | பொலனறுவை | 17,621 | 17,091 | 6.5 |
| 17. | மாத்தறை | 16,853 | 16,457 | 2.6 |
| 18. | நுவரேலியாஃஃஃ | 15,791 | 14,668 | 2.8 |
| 19. | இரத்தினபுரி | 15,441 | 13,531 | 1.7 |
| 20 | யாழ்ப்பாணம்ஃ | 14,169 | 13,757 | 1.6 |
| 21. | அம்பாந்தோட்டை | 9,833 | 4,732 | 1.1 |
| 22. | வவுனியா | 6,764 | 6,640 | 6.9 |
| 23. | மொனராகலை | 5,750 | 5,322 | 1.9 |
| 24. | முல்லைத்தீவு | 3,816 | 3,777 | 4.9 |

ஃ தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய மாவட்டங்கள். (இப்புள்ளி விவரம் வெளிவந்தபோது கிளிநொச்சி மாவட்டம் தனியாக அமைக்கப்படவில்லை.)

ஃஃ புத்தளம் மாவட்டத்தின் வடபகுதி தமிழ்பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசமாகும்.

ஃஃஃ மலையகத் தமிழ்மக்களின் மாவட்டம்.

இலங்கை முஸ்லிம் மக்களது குடிசன அமைப்பானது மூன்று முக்கிய அடிப்படைப் பண்புகளால் தமிழரதும், சிங்களவரதும் குடிசன அமைப்பிலிருந்து மாறுபட்டுள்ளது.

(அ) தமிழ் பேசும் பாகத்திலும், சிங்களம் பேசும் பாகத்திலும் பிளவுபட்ட சமூக புவியியல் பின்னணியில் வாழ்ந்து வரல்.

(ஆ) அம்பாறை மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களைப் பொறுத்து தமிழ் பேசும் பாகத்திலும் சரி; சிங்களம் பேசும் பாகத்திலும் சரி; புவியியல் தொடர்ச்சியை இழந்து சிதறிய சமூகத் தொகுதிகளாக வாழ்தல்.

(இ) தமிழ்பேசும் மக்களான இவர்களில் பெரும்பான்மையினர்—ஏறக்குறைய 60 சதவீதத்தினர் சிங்களப் பகுதியில் சிதறிய சமூகத் தொகுதிகளாக வாழ்ந்து வருதல்.

ஏனையத் தமிழ் மக்களைப் போலவோ, அல்லது சிங்கள மக்களைப் போலவோ தந்தமது மொழிவழங்கும் பிரதேசத்தில் வாழும் வாழ்க்கையைக் கூட இந்த இஸ்லாமியத் தமிழர்கள் பெற்றிருக்கவில்லை. இதைவிடச் சிக்கலான ஒரு நிலை தொடர்ச்சியான புவியியல் பிரதேசத்தில் வாழாமல் இத்தமிழ் முஸ்லிம்கள் இலங்கைத் தீவு முழுவதும் சிதறி வாழ்வதாகும்.

மேலே கொடுக்கப்பட்ட அட்டவணையில் எல்லா மாவட்டங்களிலுமே தமிழ் முஸ்லிம்களின் சதவீதமே அதிகமிருந்தாலும், தமிழ் மாவட்டங்களிலேயே அது இன்னும் அதிகமிருப்பதைக் காணலாம். ஆக தமிழ் பேசுவோருமல்லாத சிங்களம் பேசுவோருமல்லாத ஏனையோர் தமிழ்ப் பகுதிகளில் மிகமிகக் குறைவு என்பதையும் காணலாம்.

இங்கே இன்னொரு அட்டவணையும் பார்ப்போம். முஸ்லிம் மார்க்கத்தைச் சேர்ந்த மக்கள் வெவ்வேறு பிரிவு வாரியாக வருமாறு:

| பிரிவு | தொகை | சதவீதம் |
|---|---|---|
| இலங்கைச் சோனகர்கள் (தமிழ் முஸ்லிம்கள்) | 1,056,972 | 93.2 |
| மலாயர் (ஜாவகர்) | 43,378 | 3.8 |
| போரா, மேமன் முதலிய ஏனைய முஸ்லிம்கள் | 34,195 | 3.0 |
| மொத்த முஸ்லிம்கள் | 1134,555 | 100.0 |

இனி இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் இனப்பிரிவுகளின் தொகையை பார்ப்போம்: (1981 மக்கள் தொகை பற்றி அரசின் கணக்குப்படி)

| | | |
|---|---|---|
| ஈழத்தமிழர்கள் | 18,71,535 | 49.9 |
| மலையகத் தமிழர்கள் | 8,25,233 | 22.0 |
| இஸ்லாமியத் தமிழர்கள் (இலங்கைச் சோனகர்கள்) | 10,56,972 | 28.1 |
| அனைத்துத்தமிழ்பேசும்மக்கள் | 37 53,740 | 100,0 |

(10-ம் பக்கம் பார்க்க)




### யாழ்ப்பாணத்தில் அமைதியா?

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பது மாதிரி சுப்பையர் வாறார் எண்டதை அவர் குடிக்கும் சுருட்டு காட்டிக் கொடுத்திரும் பாருங்கோ.

வாங்கோ: சுப்பையண்ணை எப்பிடி ஊர் நிலவரம் எல்லாம் !

தம்பி ஊர்ப் புதினம் நிறைய இருக்குது.

ஆனா நீ நினைக்கிறமாதிரி நாங்கள் சந்தோஷப்படுகிற புதினங்கள் கிடையாது. இருந்தாலும் சொல்லுறன் கேள்.

யாழ்ப்பாணத்துக்கு உப்ப ஓரளவு சனம் திரும்பிப் போட்டுது கண்டியோ.

அங்கையும் ஆமி பிடிச்ச இடங்களிலகூட இண்டைக்கும் ''துப்பரவு செய்யப்படாதவை'' என பல இடங்கள் இருக்காம். ஆதுக்குள்ளயெல்லாம் சனங்கள் போகமுடியாது.

வீட்டுக்கு வீடு படலைக்கு மேலே வெள்ளைக் கொடியை பறக்க விட்டுட்டு சனம் ஏதோ சொந்த வீட்டில இருக்கிறம் என்ற திருப்தியில் இருக்கினமாம்.

இருந்தாலும் போன உவை ஆமிக்காரர் ஆட்களை வரச் சொல்லி அவசரம் காட்டின மாதிரி அவையளுக்கு தேவையான சாப்பாட்டு சாமான்களைக் குடுக்கிறதில அக்கறை காட்டினமில்லையாம்.

இப்பவும் பல சாமான்கள் பழைய விலையில யானை விலை குதிரை விலைதான் போகுது.

ஏதோ அவையள் தங்கட காரியம் முடியட்டும் எண்டு ஆக்களைக் கூடப்பிட்டினம் அவைக்கு அது போதுமாம்.

மற்றது மோனை கொழும்பில இருந்து பேப்பர்காரங்களை யாழ்ப்பாணம் கூட்டிக் கொண்டு போன ஆமிக்காரர் அவையளை ஒரு அடிதானும் தங்களை விட்டு தள்ளிப்போக விட மாட்டினம் எண்டு போட்டினமாம்.

அவையள் காட்டின ஆட்கள் அவையள் காட்டின இடங்கள் உதுகளைத்தான் பேப்பர்காரரும் எழுத வேண்டியதாய்ப் போட்டுது.

அதால பேப்பர்காரரும் உண்மையை எழுத முடியாமல் போட்டுதாம்.

யாழ்ப்பாணத்தில ஆஸ்பத்திரியும் பழைய மாதிரி கொஞ்ச ஆட்களோட ஒரு மாதிரி நடக்குது. ஐ.சி.ஆர்.சி. ஆட்களும் அங்கை வேலைக்கு போட்டினமாம்.

இருந்தாலும் அங்கை இருக்கிற ஆட்கள் என்ன சொல்லினம் தெரியுமே.

இவ்வளவு நாளும் நாங்கள் பட்ட ஷெல் அடி போதும் இனிமேல்ஷெல் அடிக்குப்பயப்பிடத்தேவையில்லை, என்று சொல்லுறதோட இரவில மட்டும் ஆமி வாகனங்கள் றோட்டால போற சத்தத்தைக் கேட்டால் இருக்கிற உயிர் ஒரு முறை போய் வந்தது மாதிரி இருக்குதாம்.

படிப்பகம்

www.padippakam.com



# மடல் வழிச் செய்திகள்

## நடைப் பிணமாக வாழ்கிறோம்

யாழ்ப்பாணம் மிருசுவில் என்ற இடத்தில் இருந்து 16-4-96 நா.பா.என்பவர் சென்னையில் உள்ள ''ந'' என்பவருக்கு எழுதியுள்ள கடிதம்:

இங்கிருந்து கடிதம் எழுதக் கூட வசதிஇல்லை. தற்போது இங்கு பணக்கஷ்டம். அரசாங்கம்கொடுக்கும் சம்பளம் சாப்பாட்டுக் கூட போதாது. ஒருகிலோ அரிசி 40ரூபாவும், ஒரு தேங்காய் 35 ரூபாவும் விற்கிறது.

மருந்து, மற்றும் மருந்துக் குளிகைகள் கூட இல்லை. மனவேதனை, உளவேதனை, உடல்வேதனை எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு நடைப்பிணமாக வாழ்கிறோம்.

தினமும் 30 கிலோ மீட்டர் சைக்கிள் ஓடித்தான் சாவகச்சேரிக்கு போக வேண்டும். சைக்கிள் ரயர் கிடையாது. சைக்கிள் நல்லதாக வைத்திருக்க முடியாது. எல்லோருக்கும் பல விதமான கஷ்டங்கள் உண்டு.

ஷெல் அடி. அடிக்கடி எம்மை பயமுறுத்தும் நரகவாழ்க்கை வாழ்கிறோம். இலங்கையில் இனிமேல் வாழலாம் என்று நினைக்க முடியாத நிலையாயும் இருக்கிறது.

## நிம்மதியான தூக்கம் இல்லை

யாழ்ப்பாணத்தில் ''ப'' என்பவர் சென்னையில் உள்ள ''அ'' என்பவருக்கு எழுதியுள்ள கடிதம்.

அன்பின் மகள் அறிவது நாங்கள் வடமராட்சிப் பகுதியில் இருந்து இப்போ யாழ்ப்பாணத்துக்கு வந்து விட்டோம். யாழ்ப்பாணத்தில் ஆஸ்பத்திரிக்குப் பின்னால் உள்ள சுபாஸ் ஹோட்டல் ஆமிக்காரரின் தலைமையிடமாகவும், அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக உள்ள எங்களது வீடு பொலிஸ் தலைமையிடமாகவும் இருக்கிறது.

நாங்கள் மாமா வீட்டில்தான் தங்கி இருக்கிறோம். இப்போது ஆமிக்காரர்கள் இங்குள்ளவர்களுடன் நல்லவழியாகத்தான் பழகுகிறார்கள். ஆனால் பல இடங்களில் சோதனை முகாம்கள் அமைக்கப்பட்டன. அந்தப் பகுதியால் போய் வருபவர்கள் எல்லாம் அடையாள அட்டையை காட்டித்தான் போய் வர வேண்டும்.

(ஆஸ்பத்திரியும் ஓரளவு இயங்குகிறது. கொழும்பில் இருந்து சில டாக்டர்களும், நர்ஸ்களும் வந்து வேலை செய்கிறார்கள்.)

இப்போது விமானக்குண்டு வீச்சு ஷெல் அடி இல்லாதிருந்தாலும் இரவு நேரங்களில் வீட்டில் நித்திரை கொள்வது என்பது பழைய காலங்களைப் போல் நிம்மதியாக இல்லை.

இருந்தாலும் ஒரு விதப் பயப்பீதி எல்லோரிடமும் ஏற்பட்டுள்ளது.

## இந்தியா வர யோசிக்கிறேன்

வவுனியாவில் இருந்து சிறி என்பவர் சென்னையில் உள்ள ''சு'' என்பவருக்கு எழுதியுள்ள கடிதம்.

கொழும்பில் இருந்த நாட்களில் அங்கு என்னை வைத்திருக்கப் பயந்த நீங்கள் என்னை வவுனியாவுக்கு அனுப்பி விட்டீர்கள்.

நான் இங்கு நீங்கள் நினைக்கிற மாதிரி நிம்மதியாக வாழவில்லை. குடும்பத்திலும் பிரச்சனை. நாங்கள் இருக்கும் இடத்திலிருந்து விபரங்கள் அதிகப்படியாக எழுத முடியாது. சில கடிதங்கள் இங்கு உடைத்துப் பார்க்கப்பட்ட பின்பே வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது. எனவே நான் முதலில் இந்தியா வந்து சேர்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் அங்கு வந்த பின்னர் மிச்சத்தை சொல்லுகிறேன்.

## நாம் நாடோடிகள்

கொழும்பில் இருந்து ''ம'' என்பவர் சென்னையில் உள்ள ''உ'' என்பவருக்கு எழுதிய கடிதம்.

நாம் எல்லாம் இப்ப நாடோடிகள். ஒரு உரப் பையுடன் நேரத்துக்கு நேரம் இடம் பெயர்ந்து கொண்டு திரிய வேண்டியதுதான்.

இக்கடிதம் 13-4-96 எழுதப்பட்டது.

## ஆமி அன்பாக நடக்கிறார்கள்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வந்த கடிதம் ஒன்றில் இருந்து சில தகவல்கள். சென்னையில் உள்ள ''அ'' என்பவருக்கு கொழும்பில் இருந்து ''ஜெ'' என்பவர் எழுதியது.

29-4-96ல் எல்லோரும் யாழ்ப்பாணம் வந்து விட்டார்கள் 11-5-96 ரி.வி. செய்தியில் எங்களுக்குத் தெரிந்தவர்களை எல்லாரையும் காட்டினார்கள்.

13-5-96ல் பள்ளிக்கூடங்கள் எல்லாம் தொடங்கிவிட்டது எனது வீடு, உங்கள்வீடு, போதகர்வீடு இப்படி சில வீடுகளில் ஆமி இருக்கிறார்கள். கெதியில் ஆமி வேற இடத்துக்கு மாறிக் கொண்டு வீடுகளைக் கொடுத்து விடுவார்கள் என நினைக்கிறோம்.

இவ்வளவு நாளும் கடிதப் போக்குவரத்து இல்லை இப்பத்தான் கடிதங்கள் வருகிறது. இப்போ அங்கு ''போய்ஸ்'' இல்லை. ஆமி எல்லோருடனும் அன்பாக இருக்கிறார்கள். ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம் எக்ஸ் மஸ்க்கு நாங்கள் யாழ்ப்பாணம் போகலாம் என நினைக்கிறோம்.

இக்கடிதம் 23-5-96 எழுதப்பட்டது.

ஆர்.ஆர்.எஸ்.

# கலைஞரின் வெற்றியால் ஈழத் தமிழர்களிடத்தில் பெருமகிழ்ச்சி!

**பி.பி.சி. வருணனை**

தமிழ்நாட்டின் முதலமைச்சராகக் கலைஞர் முத்துவேல் கருணாநிதி அவர்கள் பதவி ஏற்றதைக்குறித்து இலங்கைத் தமிழர்கள் பெரும் மகிழ்ச்சி கொண்டுள்ளார்கள் என்று பி.பி.சி. கூறியுள்ளது.

தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களை ஒரு அரசியல் தலைவராகக் கருதுவதை விட தமிழ் கூறும் நல்லுலகில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஓர் உன்னதமான தமிழ் அறிஞராகவே இலங்கைத் தமிழர்கள் நோக்குகின்றார்கள். டாக்டர் கருணாநிதியின் பேச்சுக்களைக் கேட்கவும், அவரது இலக்கியங்களை வாசிக்கவும், இலங்கைத் தமிழர்கள் எப்போதுமே பேரவாக் கொண்டிருப்பர்.

கலைஞர் அவர்களின் அடுக்கு மொழிப் பேச்சுக்களைக் கூட அவர்பேசுவதைப் போலவே தாமும் பேசி மகிழ்வதில் அலாதியான விருப்பம் கொண்டவர்கள் இலங்கையில் அனேகர் இருக்கின்றனர். இது தவிர கலைஞர் கைவண்ணத்தில் உருவான பராசக்தி, மனோகரா போன்ற மனதில் நிலைத்த திரைப்பட வசனங்களைக் கூட வைபவங்களில் மற்றும் கோயில் விழாக்களில் யாழ்ப்பாண மக்கள் ஒலிபெருக்கியில் கேட்டுமகிழ்வது உண்டு. கலைஞர்கருணாநிதியின் அரசியல் பேச்சுக்கள் இலக்கிய பேச்சுக்கள் என்பவற்றைக் கூட ஒலிப்பதிவு செய்து வைத்திருப்பவர் இலங்கையில் இருக்கின்றனர்.

### கலைஞரும் எம்.ஜி.ஆரும்

தமிழகச் சஞ்சிகைகளில் கலைஞரின் படைப்புகள் எதுவும் வெளிவரும் பட்சத்தில் அவற்றை வாங்கி வாசிப்பதற்கென்றே ஒரு கூட்டம் இலங்கையில் எப்போதும் இருக்கும். இலங்கையில் இனப்பிரச்சினைகள் பூதாகாரமாக வெடித்த போதிலும், அன்றுஇலங்கைத் தமிழர்களுக்காக கருணாநிதியும், எம்.ஜி. ராமச்சந்திரனும் குரல் கொடுத்து இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு மட்டுமல்ல லட்சோப லட்சம் தமிழ் மக்களுக்குக் கூட தஞ்சம் அளித்திருந்தனர். கொடிய இனவாதப்பிரச்சினைகளால் துவண்டு போயிருந்த இலங்கைத் தமிழர்களுக்கு கலைஞர் கருணாநிதி, அமரர் எம்.ஜி. ராமச்சந்திரன் வழங்கிய அரவணைப்பை இலங்கை தமிழர்கள் இன்றுகூட நினைவு படுத்துகின்றனர். இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் குறித்து கலைஞர் கருணாநிதியின் தலைமையில் சென்னை மாநகரில் நடைபெற்ற கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் என்பன இலங்கைத் தமிழர்களுக்கு தெம்பை வளர்த்தன.

### தஞ்சையில் வஞ்சனை

கடந்த ஆண்டு தஞ்சை மாநகரில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் மகாநாட்டில் பங்கு பெற்ற இலங்கைத் தமிழ் அறிஞர்களுக்கு ஜெயலலிதா அரசு கதவடைத்தது. அப்போது இந்தச் செயலை எதிர்த்து கலைஞர் கருணாநிதியே முதலில் குரல் எழுப்பினார் என்று யாழ்ப்பாணப் பேராசிரியர் சிவத்தம்பி கூறினார். அப்போது இலங்கையிலிருந்து சென்ற பேராசிரியர் சிவத்தம்பி, ஆர் சண்முகநாதன், பேராசிரியர் வேலுப்பிள்ளை ஆகியோர் தஞ்சைத் தமிழ்மகாநாட்டில் பங்கு பெறுவதை ஜெயலலிதா அரசு தடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது இலங்கையின் வடபுலத்தில் வன்னிப் பிரதேசத்தை ஆண்ட பண்டார வன்னியன் பற்றியும், அம்மன்னனது தமிழகத் தொடர்புகள் குறித்தும் கலைஞர் அவர்கள் 'பாயும் புலி பண்டார வன்னியன்' என்றசரித்திர நாவல் ஒன்றையும் எழுதியிருந்தார். 1976, 1977 ஆம் ஆண்டுகளில் சென்னை மேல் நீதிமன்றத்தில் கலைஞர் கருணாநிதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றில் இலங்கையில் தலைசிறந்த வழக்கறிஞராக இருந்தவரும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவருமாகஇருந்த அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் கலைஞர் சார்பாக ஆஜராகி இருந்தார்.

அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்துடன் அவரது புதல்வர் குமார் பொன்னம்பலமும் கலைஞருக்காக வாதித்தார். தமிழகத்தில் தமிழ் அன்பர் ஒருவருக்காக இலங்கை வழக்கறிஞர்கள் (தமிழ்) குரல் கொடுத்தது ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாகும்.

இன்று கலைஞர் கருணாநிதியின் வெற்றியை இலங்கைத் தமிழர்கள் தங்களின் வெற்றியாகவே கருதுகின்றனர்.

## செய்திச் சரம்

**24-5-1996**

நேற்று நிர்வாக சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக 95 அரசு அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

(தினமலர், கதிரவன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்துக்கு உளவு கூறி, சரணடைய முயற்சித்த 3 புலிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கதிரவன்)

நேற்று இராமேசுவரத்தைச் சேர்ந்த காணாமல் போன மீனவர்களை இலங்கை கடற்படையினர் கச்சத்தீவுக்கு அருகே இந்திய கடற்படையிடம் ஒப்படைத்தனர்.

(தினமணி, தினகரன், இந்து)

நேற்று இலங்கையிலிருந்து படகு மூலம் வந்த 17 தமிழ் அகதிகள் நாகை காயிதே மில்லத் மாவட்டம் நாகூரில் கரையேறினர். பின்னர் இவர்கள் இங்குள்ள காவல் நிலையத்தில் தகவல் கொடுத்ததையடுத்து, நாகப்பட்டினம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

(தினமணி, தினமலர், கதிரவன்)

நேற்று முன்தினம் வடமாராட்சி பகுதியில் உள்ள கொடிகாமம் எனுமிடத்தில் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே நடந்த துப்பாக்கி சண்டையில், விமானப் படையை சேர்ந்த ஒருவரும், கப்பல் படையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டனர். மற்றொருவர் காயமடைந்தார்.

(தினகரன், தினமலர், கதிரவன்)

யாழ்ப்பாணம் பகுதிக்கு முதன் முறையாக ஜனாதிபதி சந்திரிகா, வெகுவிரைவில் செல்லவிருக்கிறார் என்று அதிகார வட்டாரங்கள் கூறியதாக 'திஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(தினகரன்)

வடக்கு யாழ்ப்பாணத்தில் புலிகள் இராணுவத்தின மீது திடீர் தாக்குதல் நடத்தியதில், ஒரு இராணுவவீரர் கொல்லப்பட்டனர். 2 அப்பாவிகள் பலியானார்கள், மூன்றுபேர் காயமடைந்துள்ளனர்.

(தினகரன்)

படிப்பகம்

www.padippakam.com

# "கிழக்கு வெளுக்கிறது"

டி. கமலபுஷ்பம்

இந்தியத்திருநாட்டினிலே தமிழகத்தாயின் மடியினிலே தவழுகின்ற இராமேஸ்வரம் நெய்தல் நிலத்தின் நீண்ட கரையினிலே அந்த உதயத்து வேளையிலே இடுப்பில் இரண்டு வயதுப்பெண் குழந்தையுடன் கால்கடுக்க நின்றபடி நெடுங்கடலை அளக்கிறது மீனவர் குப்பத்து இராசாத்தியின் குறுகுறு கண்கள்,

அவள் மனமோ முந்தைய நாள் கருக்கலில் கட்டுமரத்தில் பத்தோடு பதினொன்றாய் கூலியாய் மீன் பிடிக்கப்போய் இருக்கும் அவள் கணவன் முருகனுக்காய் சங்ககாலத்து நெய்தல் நிலத்துப் பெண்களைப்போல் ஏங்கி இரங்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் இராசாத்தி இப்படி கவலைப்பட்டு நின்றதேயில்லை. அதற்கு காரணமும் இருந்தது, அவ்வப்போது இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடும் என்று தெரிந்ததும் கடலோரப்பகுதி மீனவர்களுக்கான எச்சரிக்கை என்று வானொலியில் முன்கூடியே அறிவித்து விடுகிறார்களே அதனால் அந்த நாட்களில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குள் செல்லாமல் இருந்து விடுவார்கள். எனவே உயிர் இழப்பு என்று ஒன்றும் ஏற்படுவதுமில்லை. கஞ்சியோ, கூழோ குடித்தாலும் இராசாத்தியும் வீட்டில் நிம்மதியாகத்தான் இருந்தாள்.

ஆனால் அண்மை ஆண்டுகளில் காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்று அலையும் இலங்கை இராணுவத்தினர் நடுக்கடலில் அந்தக் [illegible]த்து மீனவர்களுக்கு இழைத்த கொடுமைகள் கொஞ்சமா? இல்லை அடுத்தடுத்துகுடித்த உயிர்கள் தான் கொஞ்ச நஞ்சமா? எத்தனை அருமையான உயிர்களையும், உறவுகளையும் இழந்த சோகத்தில் அந்தக் குப்பம் குமுறி அவலம் எழுப்பித் தவித்த தவிப்பில் இராசாத்தியின் நிம்மதியும் தொலைந்து விட்டிருந்தது. அவளைப்போல் அந்தக் குப்பத்தில் எத்தனையோ பெண்களின் நிலையும் அன்று முதல் நிம்மதி தொலைந்ததாகித் தான் போய்விட்டது.

கணவனை இழந்த பெண்ணும், மகனை இழந்த தாயும், தந்தையை இழந்த பிள்ளைகளும் என்று எத்தனை! எத்தனை! வேதனைக்கோலங்கள் இன்று அந்தக் குப்பத்தில்! அவர்கள் ஒவ்வொருவரையும் பார்க்கும் போது இராசாத்தியின் இதயம்கனக்கும், என்ன புண்ணியமோ அவள் கணவன் முருகனுக்கு இன்றுவரை கடலில் ஒரு ஆபத்தும் ஏற்படடதில்லை, என்றாலும் அவன் கரைவரும் வரை அவளுக்கு உயிரே இருக்காது. அதனால் தான் இப்பொழுதெல்லாம் ஒவ்வொரு காலைப்பொழுதும் கரையில் வந்து நின்று கடலை பார்த்தபடி ஏங்கி நிற்பாள். அவள் கணவனுக்காக மட்டுமல்ல அந்தக் குப்பத்திலிருந்து மீன் பிடிக்கச் செல்லும் எல்லா சகோதர உறவுகளுக்காகவும் தான் இறைவனிடம் வேண்டிக் கொள்வாள்.

கட்டு மரங்கள் இன்னும் கண்ணில் படவில்லை. காலை ஏழு மணி கரையவில்லை என்றாலும் கோடை வெய்யில் என்பதால் அந்தக்கடற்கரையிலும் சூரியனின் கதிர்கள் மேனியில் அனலாய்த்தான் விழுந்தன. இடுப்பில் இருந்த இராசாத்தியின் குழந்தை கண்களைக்கூசியது. அதுவரை எங்கோ விளையாடிக்கொண்டிருந்த இராசாத்தியின் ஏழுவயது மகன் அப்போதுதான் ஓடிவந்து தாயின் காலைக் கட்டிக்கொண்டு மேற்கடலை பார்த்தான்.

## நடைச் சித்திரம்

அவர்களின் வறுமைக் கோலத்தை அணிந்திருந்த ஆடைகள் படம் பிடித்துக் காட்டிக்கொண்டிருந்தன. திருநாட்கள் வருவது ஏழைகளும்உடைகள் சேர்ப்பதற்காக என்று சொல்லுவார்கள். ஆனால் இராசாத்தி திருநாட்களுக்கென்று தனக்கும் குழந்தைகளுக்கும் உடைகள் எடுத்து மூன்று வருடமாகிறது. இலங்கை இராணுவத்தின் அக்கிரமம் அந்த மூன்று வருடங்களில் மிகக்கொடிய நிலையிலேயே இருந்தது. அந்தச் சமயத்தில் அவள்சொந்தத்தில் அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன் என்று பல உறவுகள் பறிபோயிருந்தன. எனவே தான் தைப்பொங்கல், சித்திரை வருடம், தீபாவளிஎன்று அடுக்கடுக்காய் விழாக்கள் வரும் போது இறந்தவர்களில் யாராவது ஒருவரின் ஒரு வருடம் கழிந்திருக்காது அதனால் புத்தாடை உடுத்த முடியாது போய்விடும். அவளின்வறுமை நிலைக்கு அதுவும்சாதகமாகத் தான் இருந்தது. இல்லை என்றால் இருக்கும் கவலையோடு திருநாட்களில்குழந்தைகளுக்கு உடைகள் வாங்க வேண்டும் என்ற கவலையும் சேர்ந்து மண்டையை உடைத்து விடுமே!

என்றாலும் இராசாத்தி அடியோடு உடைகள் எடுக்காமல் விடுவது மில்லை. வேறு நாட்களில் பார்த்து தனக்கும் குடும்பத்துக்கும் அங்கு வரும் பொட்டணக்காரரிடம் தன் வசதிக்கு தகுந்த மாதிரி கைத்தறி உடைகளையாவது வாங்கிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக பணம் கட்டுவாள்.

அவளுக்கும் தன் குழந்தைகளுக்கு நல்ல ஆடைகள்வாங்கி உடுத்திப் பார்க்க வேண்டுமென்று கொள்ளைஆசைதான் இருந்தென்ன அவளின் வறுமைக்கோலம் அதற்கு இடம் தர வேண்டுமே! அவள் கணவனின் பிழைப்பு அப்படி! இராணுவத்தின் கெடுபிடியால் பலநாள் பயத்தில்தொழிலுக்கு போக முடியாமல் போய்விடும். பின் என்ன. செய்வதென்று வயிற்றுப்பிழைப்புக்காக உயிரைக்கையில்பிடித்துக்கொண்டு போனாலும் இயற்கை அனர்த்தங்கள் வேறு இடையில் வந்து பிழைப்பில் மண்ணை அள்ளிப் போட்டுவிடும். இப்படி வருடத்தில் பாதிநாட்கள் தொழில் இல்லாமல் பிழைப்பு கெட்டுப் போய்விடுகிறது. இந்த இலட்சணத்தில் குழந்தைகளுக்கு எதை எதையோ செய்ய நினைத்து அந்த நினைவுகள் முளையிலேயே கரைந்துபோக ஏமாந்து வாடிப் போவாள் இராசாத்தி.

தூரத்தில் கட்டு மரங்களின் வருகை இப்போது கண்ணுக்குத் தெரிந்தது. இராசாத்தியின் நெஞ்சமும்அலைபாய்ந்தது. எந்த அசம்பாவிதமும் நடந்திருக்கக் கூடாது என்று இறைவனை வேண்டிக் கொண்டது. கட்டுமரம் கரையை நெருங்கியது எதுவும் நடக்கவில்லை என்று தெரிந்ததும் ராசாத்திக்கு கருக்கலில் போன உயிர் இப்போது மீண்டும் திரும்பி வந்தது. சற்று நேரத்தில் கரையேறிய முருகன்... ''போய் காப்பித் தண்ணி வை புள்ள கணக்கு பார்த்துக்கிட்டுவாரன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

இராசத்தி குடிசைக்கு வந்து காப்பிக்கு தண்ணி வைத்து கலந்து கொண்டிருக்கும்போது முருகன் வந்தான் கையில் கறிக்கு மீனும் பலகாரப் பொட்டலம் ஒன்றும் இருந்தது. வந்ததும் பிள்ளைகள் இருவரையும் உச்சி முகர்ந்து பலகாரப்பொட்டலத்தைப் பிரித்து இருவருக்கும் கொடுத்துவிட்டு மீதியை இராசாத்தியிடம் கொடுத்தான். முருகன் இப்படித்தான் கிடைக்கும் கூலிக்கேற்ப பிள்ளைகளுக்கு கடலை மிட்டாயாவது வாங்காமல் வீட்டுக்கு வர மாட்டான்.

இராசாத்தி கலந்த காப்பியை முருகனிடம் கொடுத்தவாறு விசாரித்தாள். 'ஏன் மச்சான் சேதி தெரிஞ்சுகிட்டு வந்திகவா?' என்ன என்பது போல் காப்பியை உறிஞ்சியவாறு முருகன் தலையாட்டினான். ராசாத்தி தொடர்ந்தாள் 'காலையில காப்பிப் பொடி வாங்கன்னு நம்ம குப்பத்து பொட்டிக்கட இராமசாமி அண்ணாச்சி கடைக்குப்போயிருந்தேன். அப்போ அவுக ரேடியோவுல நியூசு போய்க்கிட்டு இருக்க எல்லாரும் கூட்டமா நின்னு கேட்டுகிட்டுஇருந்தாக. நம்ம கலைஞரு இல்ல மச்சான் அவுகதான் இந்தமுற தமிழ்நாட்டுக்கு முதலமைச்சர் என்று அறிவிச்சிட்டாகளாம். எல்லாருமே பேசிகிட்டு இருந்தாக மச்சான். அவுக வந்தா நமக்கெல்லாம் நல்லகாலம் பிறக்குமென்று வேற பேசிகிட்டாக. கேட்கவே சந்தோசமா இருந்திச்சு மச்சான்' என்றவள்

'ஏன் மச்சான் நெசமாத்தான் அவுக ஜெயிச்சுட்டாகளா?' 'ஆமா புள்ள அதர்மம் எத்தினி நாளைக்கு புழைச்சுத் தழைக்கும்? தர்மம் எத்தினி நாளைக்கு தலைகுனியும்? தர்மம் ஜெயிச்சாச்சு புள்ள' என்றான் முருகன் உற்சாகமாக. இராசாத்தி தொடர்ந்து பேசினாள் ''இந்த இலங்க அகதிக அவுக நாட்டில் எப்படி இருந்தாக உசிர காப்பாத்திக்க நம்ம நாட்டுக்கு வந்த குற்றத்துக்காக இந்த அஞ்சு வருசத்தில எம்புட்டு கஷ்டமெல்லாம் பட்டிடிச்சுக அவுகளுக்கு இனிவிடிவு வருமா மச்சான்?'' ''வரும் புள்ள வரும். நிச்சயமா அவுகளுக்கு இனி விடிவு வரும்'' என்றான் நம்பிக்கையோடு முருகன்.

இராசாத்தி ஐயமெல்லாம் தீர்த்துக் கொள்வதில் தான் ஆர்வமாக இருந்தாள் 'அதுசரி மச்சான் நீங்கதான் தினம் நம்ப ராமசாமி அண்ணாச்சி கடையில பி.பி.சி. செய்தி கேட்டுகிட்டு வந்து சொல்லுவீகளே யாழ்ப்பாணத்துல அது எம்புட்டுபேரு மச்சான்...'

'ஐஞ்சு லட்சம் பேருபுள்ள'

''ஆமா ஆமா ஐஞ்சு லெட்சம் பேரு தண்ணி, வெண்ணி சாப்பாடு மருந்து மாத்திர எல்லாத்துக்குமே கஷ்டப்பட்டுகிட்டு நடுத்தெருவுல நிக்கும் போது நம்ப தமிழ்நாட்டில் இருந்து அவுகளுக்கு உதவி செய்யப் போனவுகள தடுதிட்டாங்க என்னு சொன்னீகளே மச்சான்''

''ஆமா ராசாத்தி. இந்த நாட்டில வாழ்ற நாமஎழுப்பின அவல ஓலமே இருந்த அரசு காதில விழ இல்ல. அடுத்த நாட்டிலகஷ்டப்படுறவகளுக்கா கருண காட்டப்போகுது. எல்லாம் பேச்சுக்குத்தான்'புள்ள'' என்று சலித்தான் முருகன்.

'எல்லாம் அந்த இலங்கை இராணுவ பாதகனுங்களால தான் மச்சான் நம்ம கடல்ல மீன் பிடிக்கிறவுகள நம்ம எல்லைக்குள்ளேயே வந்துகன்னா பின்னா என்னு காட்டுமிராண்டிகளா சுட்டுத்தள்ளுறவனுங்க அவனுங்க கட்டுப்பாட்டுக்குள்ள இருக்கிற அந்த அப்பாவி தமிழ் மக்களுக்கு எம்புட்டு கொடுமபண்ணுவானுக' என்று நீண்ட பெருமூச்சொன்றை எறிந்த இராசாத்தியிடம் முருகன் சொன்னான்.

''ஆமா புள்ள நம்ப கலைஞரு இல்ல அவுகளும்இன்னும் சில கட்சிகளும் சேர்த்து யாழ்ப்பாணத்துல குண்டு போடும் போது தமிழ்நாட்டில் போராட்டம் உண்ணாவிரதம் என்னு இருந்து அந்த அக்கிரம செயலுக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவிக்க இல்லைன்னா இன்னேரம் இலங்கை ராணுவம் அந்த ஐஞ்சு லெட்சம் பேருல பாதிபேர கொன்னு தீர்த்திருப்பானுங்க.'

'ஆ... அக்கிரமக்காரனுங்க அக்கிரமக்காரனுங்க இவனுங்களுக்கு அழிவே வராதா?' ராசாத்தி மனம் நொந்துதிட்டியவாறு அவசரமாய் சொன்னாள். 'ஏன் மச்சான் இப்ப தான் நம்ம கலைஞரு வந்திட்டாரில்ல. அந்தயாழ்ப்பாணத்து மக்களுக்கு அவுக உதவி செய்யலாமில்ல, அவுகள காப்பாத்தலாமில்ல.' ராசாத்தியின் வேகத்தைப் பார்த்துச் சிரித்தபடி சொன்னான் முருகன்.

''என்ன புள்ள நீ. ஆக்கப் பொறுத்த நாங்க ஆறப் பொறுக்க வேணாமா. இன்னைக்கு தேதி என்ன வைகாசி பத்து. நாளைக்குத்தான் எல்லாத் தேர்தல் முடிவுகளும் தெரியும், அப்புறம்தான் கலைஞரு பதவி ஏற்பாரு. அதுக்குப் பிறகு அவரு எல்லாருக்கும் நல்லது செய்வாரு ராசாத்தி. கலைஞரு யாரு ஒரு தமிழரு இல்ல அவுக இலங்கமக்களுக்கு உதவி பண்ணாம இருப்பாகளா'' என்றவனிடம் 'என்னமோ மச்சான் அந்த மக்களுக்கு ஒருநல்லகாலம் பொறந்தாத் தான் நாம் அன்றாடம் காச்சிக நிரந்தரமா நிம்மதியா இருக்க முடியும்'' என்று ஏக்கத்தோடு கூறிய ராசாத்தியிடம்...

'ஆமா ராசாத்தி நீசொல்றதும் நெசம்தான் புள்ள. நீ ஒன்னும் கவலப்படாத. இந்த தேர்தல்ல மக்கள்தான் விழிச்சுகிட்டாகளே! நல்லது செய்யக் கூடியவகளத்தான் தேர்ந்தெடுத்திருக்காகளே' இனி எல்லாம் நல்லதுதான் புள்ள நடக்கும்' என்று உறுதியோடு கூறியவன், 'ராசாத்தி நீ சோறு பொங்கி சீக்கிரமா புள்ளைகளுக்கு குடு. புள்ள நான் நம்ம அண்ணாச்சி கட வரையில போய் தேர்தல் முடிவுஇன்னும் சொல்லிகிட்டு இருக்காக கேட்டுகிட்டு பத்திரிகையையும் படிச்சுகிட்டுவாரன்' என்று தோளிலே துண்டை உதறிப் போட்டுக் கொண்டு கிளம்பினான். இராசாத்தியும் ஏதோ ஒரு புதுத் தெம்போடு சோறுபொங்க உலை வைக்கத் தயாரானாள். ●

## சென்னையில் மலேசிய மலைப்பாம்பு

சென்னையைச் சேர்ந்த கிண்டியில் உள்ள 'கில்பர்ன் எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி' வளாகத்தில் 30 கிலோ எடையுள்ள மலைப்பாம்பு ஒன்று பிடிபட்டிருக்கிறது. மலேசியக்காடுகளில் காணப்படும் இவ்வகை மலைப்பாம்பு இங்கே மூன்றாவது தடவையாகப் பிடிபட்டிருக்கிறதாம்!

## எய்ட்ஸின் ஏறுமுகம்

சென்ற மாத கணக்குப்படி உலகமெங்கும் சுமார் ஒரு கோடி எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர்; இதில் 15 இலட்சம் பேருக்கு நோய் முற்றியுள்ளது; இவர்களில் 40 சதவிகிதத்தினர் பச்சிளங் குழந்தைகள். 2000 ஆம் ஆண்டில் நான்கு கோடிப் பேர் எய்ட்ஸ்சுக்கு ஆளாகக் கூடுமாம்!

# பூக்கள் சரிந்தன பூவிதழ்கள் உதிர்ந்தன

- எஸ். கிங்ஸ்லி -

விழிகளின் கோலங்கள், வேதனைக் கோலங்கள் சொலொண்ணாத்துயரங்கள், சொர்க்க பூமியில் தாண்டவமாடு இனவெறிப்பேயின் அராஜக ஆட்சியால் அல்லல்படும் தமிழ் மக்களின் அவலங்கள்!.

''சிறகடித்துப் பறக்கும் சிட்டுகள் சில-
ரீங்காரம் கொண்டங்கு தங்கும்.
வண்ண மலர்கொண்ட மதுகொண்ட இதழில்,''
பூந்தளிர் துளிர்விடும் அழகிய பூஞ்சோலை
வான்புகழ் வள்ளல், தித்திக்கும் இனிய,
வையகம் அமைத்திட்ட எம்தேவன்-வழியில்
கடைவிழிக் கண்கொண்டு காணும்-நம் தேசம்,
காட்டேறிப் பேய்கள் இன்று நாடேறி வரும் வேகம்,
கண்காணும் தேசமெல்லாம் காலேறிப்போகும் தூரம்
தாவணி மீதினில் வெறித்தாளம் ஒன்றுபோடும்
மதத்துவேசம்.''

ஆறிப்போன சோறாய், காய்ந்துபோன சேறாய், நீரற்ற மரமாய், தேனற்ற மலராய் இன்று தமிழ் ஈழ மண்ணில் மக்கள் படும் அவலங்கள் எத்தனை......! எத்தனை.....?

''வாகனங்கள் விட்டான் வள்ளல்—அது
கானங்கள் பாடும் கருவிகள் ஆயிற்று,
விழிக்கோளங்கள் கொண்டான் வாணன்—அது
மாயங்கள் கொண்ட இரு மானிடம் ஆயிற்று,''
ஆண்டு பலகால் இப்புவி மீதினில்
ஆவிகள் மேற்கொண்ட அண்ணல்கள்,
ஆன்றோர்கள்: ஆயிரம்!......... ஆயிரம்!

இருந்தும்.....மண்ணின் மைந்தர்களாய், மாபரனின் தோழர்களாய், விண்ணின் வேந்தர்களாய் வீறு கொண்ட எம் இனவல்கள் சிலர்............

தாரணி பெற்றெடுத்த தமிழ், அகிலம் போற்றும் மதம், அறம் கொண்ட புகழ், எம் ஈழ மண்ணின் மணம் கொண்ட மலர்-சிந்திய-ஈழத்தாய் பெற்றெடுத்த, செம்மண் வேந்தன் சீரிய தலைவன் - தமிழ் மண் காட்டும் 'ஒரியூர்' 'அருளானந்தம்' அடியின் - உறவுகள்; எம் குருக்கள்.

''வெள்ளையன் ஆட்சிக்கு வேட்டு வைத்தவன்
தான் வாழும் மண்ணைக் காக்கவே,
வீறு நடை கொண்டவன்,
வேறுபாடு அறுத்தெறிந்து விண்புகழ் நாட்டியவன்
இறுதியில் சிங்கள 'து-வேசிகளின்'
வேட்டுக் கிரையானவன்.,
எம் மானமுள்ள தமிழன்
பைந்தமிழ்ச் செல்வன்,
ஈழத்தாய் ஈன்றெடுத்த - ஈடு
இணையற்ற வேந்தன்.''

மொட்டைக் கோலம்பூண்டு செம்மஞ்சள் மாறுபோட்டு, நாட்டை ஏமாற்றும் நாட்டியக் காரர்கள் சிங்களவெறிப் பிக்குகள். ஐம்புலன் அடக்கி, மூவாசை ஒறுத்து, ஆண்டவன் பணியே- ஆருயிர் என்று வேடிக்கை நாடகம் பூண்டவர்கள் பிக்குகள். ஆட்சிக்கு அடிமையாகி, ஆணவம் கொண்டு அராஜகவாதிகளாகி, உலகத்தை ஏமாற்று சூனியக்காரர்கள் பிக்குகள். அழிவுக்கு அஸ்திவாரமாகி, ஆண்டவன் செயலென்று அல்லும் பகலும் பாம்பின் 'வஞ்ச நஞ்சு கொண்டு அலைபவர்களே சிங்கள இனவெறிப் பிக்குகள்.

''சிறு எறும் பேனும் கொல்லுதல் குற்றம் - அது
ஆண்டவன் ஏற்கா மாபாவம் - இது
எம் புத்தரின் வாக்கு'' — என்று

தினம் தினம் கூறி, ஐந்தறிவு கொண்டு ஜீவராசியான மானிடத்தை அழிக்க வழி சொல்பவர்கள்; - மதப் போதகர்-என்ற போர்வையில்; மஞ்சள் துணியால் உடல் மறைத்து-மாயாஜாலம் செய்யும் மந்திர - தந்திரிகள் சிங்கள பிக்குகள்......... பிக்குகள்......... பிக்குகள்..........!

''தெருவெல்லாம் வெடிமுழக்கம்,
தீயோனின் பறை முழக்கம்
அருவிகள் சடம் சுமக்கும்
அங்கங்கு பிணம் மணக்கும்
இங்கு ஒரு குணம் சிரிக்கும் - அது
எம் குருக்களின் பழக்கம்.!''

ஆம்! ''கணம் சென்று வந்திடடா கண்ணே - என் உளம் வெந்து போவதற்கு முன்னே'' என்று வீர மார்பு தட்டி, மறப்பால் ஊட்டி, வளர்ப்பவள் ஈழத் தமிழ்த் தாய். அத்தகைய தாய் பெற்ற பிள்ளை எம் குருக்கள். பிசிர்வேர் அறுந்தாலும் ஆணி வேர் நிலைக்கும். ஆனால், ஆணி வேரும் அறுந்தால் மரத்தின் கதை என்ன ஆவது?......

## மின்துறை
# வேலைநிறுத்தத்தால் திண்டாடும்இலங்கைமக்கள்

பி.பி.சி. தரும் தகவல்

மின்துறை வேலையாட்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு இந்தத் தருணத்தை தேர்ந்து எடுத்து இருக்கின்றனர் என்பது பலருக்கு நம்ப முடியாத விசயமாக இருக்கிறது. தினம் 6 மணி நேரம் நடைமுறையில் இருக்கும் மின் துண்டிப்பினால் கஷ்டப்பட்டு வரும் இலங்கை மக்கள் தமது முணுமுணுப்புக்களை நிறுத்தி விட்டனர். ஆனால் இப்போது பொது மக்களின் நல்லெண்ணம் விவிம்புக்குத் தள்ளப்பட்டு விட்டது.

இலங்கை மின் சக்தி சபையின் 4 ஆயிரம் பொலிஸ் உதவியாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர். அரசுடன் இணக்கம் ஏற்படும் வரை மின் சக்தி இல்லை என்ற ஒரு நிலைமை. இருள் சூழ்ந்த கொழும்பு வீதிகளில் ஒரே குழப்ப நிலைமை. நகரில் உள்ள பெற்றோல் நிலையங்களில்நீண்ட க்யூ வரிசைகள். தங்கள் இயந்திரங்களை ஓட்டுவதற்கு சிலரிடமே ஜெனரேட்டர்கள் இருந்தன.

போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சமிக்ஞை விளக்குகள் செயல்படாததால், பொலிசார் எல்லாம் முக்கிய சந்திகளிலும் தெரிசல் நேரப் போக்குவரத்தைச் சமாளிக்க வேண்டி இருந்தது. உள்ளூர் பலசரக்குக் கடைகளில் மண்ணெண்ணெய் கடுமையான விலையில் விற்கப்பட்டது.

வீட்டில் ஜெனரேட்டர் இல்லாத சாதாரணமானவர்களுக்கு வெளிச்சத்துக்கான ஒரே வழி மண்ணெண்ணெய் தான். மின் சக்தியின் ஒரு பகுதியைத் தனியார் பயன்படுத்திக்கொள்ளும்ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களின் திட்டத்தை எதிர்த்தே இந்த வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. மின் உற்பத்திப் பிரிவில் எந்த பகுதியும் தனியார்துறை பயன்படுத்த மாட்டாதுஎனஅரசுஎழுத்தில்உறுதி வழங்க வேண்டும் என மின் சக்தித் தொழிற் சங்கப் பிரிவினர் கேட்கின்றனர். இப்போதைய மின் பற்றாக்குறையில் உதவுவதற்காக ஜனாதிபதி தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களுக்கு கை காட்டி இருக்கிறார். இப்போது உருவாகி இருக்கும் மின்சக்தி பற்றாக்குறை 50 சதவீத உற்பத்தி இழப்பை ஏற்படுத்தி இருப்பதாகப்பொருளாதார முன்னணியாளர்கள் கூறுகின்றார்கள்.

வேலை நிறுத்தம் நடக்கிறதோஇல்லையோ நாட்டின் மின் சக்தியை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான தேவையான தண்ணீரை நீர்த்தேக்கங்களுக்கு நிரப்புவதற்கு போதுமான மழை இன்னமும் பெய்யவில்லை.

## திருப்பதி லட்டு அடக்கம்

திருப்பதி லட்டு ஒன்றைச் செய்ய ரூ.11 செலவாகிறது. 175 கிராம் எடையுள்ள இந்த லட்டு நான்கு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆகவே, திருப்பதி வெங்கடாசலபதி கோயிலில் லட்டு விற்பனையால் ஏராளமாக நட்டம் ஏற்படுவதாகவும், இது சிறப்புத் தரிசனத்திற்காக விற்கப்படும் டிக்கட்டுகள் மூலமும் நன்கொடைகள் மூலமும் சரிக்கட்டப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜேம்ஸ்பான்டுக்கு கௌரவம்

'ஜேம்ஸ் பாண்ட் 007' என்கிற கதாபாத்திரத்தை முக்கியமாக வைத்துத் துப்பறியும் புதினங்கள். எழுதிப் புகழ் பெற்ற 'இயன் பிளமிங்'கிற்கு இலண்டனில் அண்மையில் தான் பாராட்டுவிழா நடைபெற்றது. இதிலென்ன வேடிக்கை தெரியுமா? அவர் இறந்து முப்பதாண்டுகள் ஆகின்றன.

## விண்வெளிக் கோதுமை

விண்வெளியிலோ, சந்திரன் அல்லது செவ்வாய்க் கிரகத்திலோ வளர்க்கத் தக்க புதியரகக்கோதுமையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். (அபோஜி) எனப்படும் இந்த அதிசயக் கோதுமை, சாதாரணக்கோதுமையைவிட மூன்று மடங்கு பலன் தரக்கூடியது என்கிறார்கள்!

ஆம்! இது எம் குருகுலத்தின் வரலாறு!

இன்றைக்கு 2000ம் ஆண்டுகளுக்கு முன் அகிலமெல்லாம் பவனி வந்து பரவ இருளில் சிக்கித் தவித்த மனிதகுலத்தை மீட்க மனு உரு எடுத்தவர் தலைவர்களுக்கெல்லாம் தலைவர். மண்ணின் மைந்தர் - பரலோகத்தின் இளவேந்தன்- பூலோகம் போற்றும் புண்ணியன் எம் இறைத்தந்தை 'இயேசுபிரான்'

அப்பரலோக நாதனின் வழியில் ''வா''...''பேச''... என்ற இரு சொல்லிற்கிணங்க வாழ்வையே அர்ப்பணித்து - சொந்தங்கள் துறந்து - சொத்துக்கள் மறந்து - பந்தபாசங்களை அறுத்தெறிந்து - உறவுகளை உதறி எறிந்துவிட்டு ''வ(ர)''ந்தவர்கள்;...................

(அடுத்த இதழில்)

# செய்திச்சரம்

21.5.1996

இலங்கையின் வடக்கில் தங்களுடைய ஆசைக்கு இணங்க மறுத்த 8 தமிழ் பெண்களை கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு பழியைத் தங்கள் மீது போட்டுவிட்டதாக இராணுவத்தினர் மீது புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

(தினமணி, தினமலர், கதிரவன்)

நேற்று இலங்கையை அமைதிப் பூங்காவாக்க நல்லெண்ணத் தூதுக்குழுவை விஸ்வ இந்து பரிஷத் அனுப்பியுள்ளது என்று தமிழ்நாடு விஸ்வ இந்து பரிஷத்தின் மாநில இணைச் செயலாளர் கோதண்டராமன் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

(தினமலர், கதிரவன்)

22.5.1996

இராமேசுவரத்திலிருந்து கடந்த 7ம் தேதி காணாமல் போன 4 மீனவர்கள் இலங்கை பலாலியில் பத்திரமாகவுள்ளனர் என்று தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஜெனிபர் சந்திரன் நேற்று முன்தினம், செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

(தினமணி, கதிரவன், இந்து)

இலங்கையில் பூரண மின்தடை ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்காக வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து அரசு டெண்டர் கோரியுள்ளது என்று எரிசக்தித்துறை அமைச்சர் அனுருத்த ரத்வத்த கூறியுள்ளார்.

(தினமலர், கதிரவன், இந்து)

வடகிழக்கு பகுதியில் இராணுவத்தினர் மீது நடத்திய தாக்குதலில் 16 வீரர்கள் கொல்லப்பட்டனர், 6 புலிகள் இறந்தனர் என்று லண்டனில் இருந்து புலிகள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

(தினமலர்)

28.5.1996

நேற்று இலங்கையில் மன்னார் பகுதியில் போராளிகளின் 2 படகுகளை கடற்படை தாக்கியது. இதில் இறந்தவர் எத்தனை பேர் என்பது தெரியவில்லை.

(தினகரன்)

யாழ்ப்பாணம் நகரில் நிர்வாக சீர்திருத்த பணிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக 120 அரசு அதிகாரிகளை அனுப்பவும் முடிவு செய்துள்ளது.

(தினமலர்)

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்துவரும் நீதிபதி சித்திக் அடிக்கடி விடுமுறையில் சென்றுவிடுவதால், அந்த விடுமுறை காலத்தில் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கைதிகள் சார்பில் மனிதஉரிமைக்கழகத்தைச் சேர்ந்த அனந்தன் என்பவர் நேற்றுஹைகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்தார்.

(தினமணி, தினகரன், தினமலர், கதிரவன்)

# புத்த மத வெறியும்-சிங்கள இன வெறியும்

கரூர் வழக்கறிஞர் பி. ஆர். குப்புசாமி

உலகின் கண்முன் மூஸ்லீம் மத வெறி, இந்து மத வெறி முதலியவைகள் தான் அடையாளம் காட்டப்படுகின்றன. ஆனால் இன்று மிகமிகக் கொடூரமான முறையில் இலங்கையில் செயல்பட்டு வரும் மிகவும் வெறியூட்டப்பட்ட புத்த மத வெறியைப் பற்றி உலகிற்குச் சரிவரத் தெரியாமல் இருந்து வருகிறது.

இலங்கை அரசியல்வாதிகள் சிங்கள வாக்குகளைப் பெறும் நோக்குடன், சிங்கள இன வெறியையும், பௌத்த மத வெறியையும் ஊதி ஊதி வளர்த்தனர். அதன் விளைவு புத்த சங்கம் நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை விட, சூப்பர் அரசாங்கமாக மாறி விட்டது.

## பௌத்த மதவெறி

பெருவாரியாக உள்ள சிங்கள மக்களுக்கு இனவெறியும் மேலும், மேலும் ஊட்டப் பெறவே பௌத்த மஹா சங்கத் தலைமையின் விருப்பத்திற்கு விரோதமாக ஜனநாயக நெறிகளையும், சகோதரத்துவக் கொள்கைகளையும் சிறுபான்மையினர் பாதுகாப்பு போன்றவைகளையும் அங்கு யாராலும் காப்பாற்ற முடியவில்லை. 1972-ல் சட்ட விரோதமாக நிறைவேற்றப் பட்ட அரசியல் சாசனத்தில் புத்த மதமே அரசு மதமாக அறிவிக்கப்பட்டு, இலங்கை ஒரு புத்தமத நாடாகப் பிரகடனப்படுத்தப் பட்டுவிட்டது. சட்டங்களிலும், அரசு உத்தரவுகளிலும் அரசியல் தலைவர்கள் பேச்சுக்களிலும் புத்த மத இலங்கை [BHUDDHIST SRI LANKA] என்றே தவறாமல் குறிப்பிடப்பட்டு வந்தது; வருகிறது. மதவெறியின் உச்சியில் இப்போது சிங்கள இனம் அங்கு இருந்து கொண்டிருக்கிறது. எனவே பொதுவாக சிறுபான்மையினரின் உரிமை தேசிய இன உரிமை என்றெல்லாம் பேசிவந்த பலவித பொது உடைமையினர் கூட வாய் மூடி மவுனிகளாகி விட்டார்கள். கிளப்பப்பட்ட இன மதவெறி சமதர்மக் கொள்கைகளுக்கும் தொழிலாளர் நன்மைக்கும் எதிராகச் செயல்படுகிறதுஎனவேதான்இன்றைக்கு கூட தொண்டமான் தலைமையில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டி வந்திருக்கிறது.

## தமிழர்களை ஒழிக்க முன்னுரிமை

இலங்கையின் பொருளாதாரமே சீரழிவது கண்டும், மதவாத மஹாசங்கம்கவலைப் படவில்லை. சமதர்ம இலட்சியத்தோடு தொடங்கப்பட்ட, ரோகன விஜவீராவின் ஜனதா விமுக்தி பெரமுனாவினரை 1971-ல் பதினைந்தாயிரம் பேரைக் கொலை செய்து புனிதமான நதி என அவர்கள் கூறும் 'மாவலி' கங்கையில் பிணங்களை வீசிஅதை இரத்த ஆறாக மாற்றினார்கள். மீண்டும் 80- களில் ஒரு முறை நாட்டிலுள்ள கொலைகாரர்களையும், சிறையில் இருந்த கொலைகாரர்களையும், ஏவி ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்தவர்களை நேரடியாகச் சுட்டோ, குத்தியோ கொல்ல ஒரு குறிப்பிட்ட ராணுவ அமைச்சர் ஏற்பாடு செய்தார். அப்போது சுமார் முப்பதினாயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப் பட்டார்கள்.

பௌத்த மத வெறியர்கள் கிறிஸ்தவ, இந்து மதங்களை அந்நிய மதங்கள் என்று அறிவித்தனர். போப் ஆண்டவர் கொழும்பிற்கு வரும்போது அவரை எதிர்த்தும கலகம் செய்தனர். ஆனால், தமிழர்களைஒழிப்பதற்கு முன்னுரிமை கொடுத்தும், மேற்கத்திய கிறித்தவ வல்லரசுகளின் உதவி பெற வேண்டியும் கிறித்தவ மதத்தினரின் மீதான தாக்குதலை ஓரளவு ஒத்தி வைத்துள்ளார்கள்.

இந்திய வம்சாவளி இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும், பூர்வீகத்தமிழர்களுக்கும்இடையிலேபிளவு ஏற்படுத்தத் தொடர்ச்சியான முயற்சியை சிங்கள பௌத்த மதவெறி அரசியல்வாதிகள் செய்து வருகின்றனர். ஆனால் மத வெறிஉச்சிக்கு போய்விட்டசிங்களரைக்கண்டு பயந்து உலகத்திலேயே சிறந்த 'கொரில்லா' வீரர்கள், தியாகசீலர்களான ஈழத்தமிழர்களின் விடுதலைப் படையே நாசமாக்கப்பட்டு விட்டால் தங்கள் கதி அதே கதிதான் என்பதை உணர்ந்து தற்போது மலையகத் தமிழர்களின் தலைவரான தொண்டமானும், பூர்வீகத்தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகிறார்.

## மதக்கடமையாகிவிட்ட தமிழினக்கொலை

தற்போது சிங்கள பௌத்த மத வெறியர்களுக்குச் சிங்களப் படையினரை வெறியேற்றிப் போராட வைக்கவேண்டிய கடமை ஏற்பட்டுவிட்டது. எனவே அவர்கள் படை முகாம்களுக்குச் சென்றும், சிங்கள சிப்பாய்களின் மதவெறி உணர்வைக் கொம்பு சீவி விட்டு, தமிழர்களை அழிக்க எந்த யுத்த நியதியையும் கடைப்பிடிக்க வேண்டியதில்லை என்ற அளவிற்கு அவர்களைதயாரித்து விட்டார்கள்.

உண்மையில் உலகிலேயே பலவீனமானதும், பயிற்சியற்றதும் பயந்த சுபாவமுடைய பதினைந்தாயிரம் பேர் கொண்ட ஒரு சிற இராணுவமான சிங்கள இராணுவம் இன்று ஒரு இலட்சம் பேர் கொண்டதாகவும், பல நாட்டு இராணுவப் பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்பட்டவர்களாகவும், குறிப்பாக இந்திய அமெரிக்கப் பயிற்சியாளர்களால் தயாரிக்கப்பட்டவர்களாகவும் ஆகிவிட்டார்கள். ஒவ்வொரு சிங்கள சிப்பாயும் ஒவ்வொரு தமிழனையும் கொல்வது தன் புத்த மதக் கடமை என்ற உணர்வின் உச்சியில் இருக்கிறான்.

சிங்கள இனவெறி, பௌத்த மத வெறி ஏற்றப் பட்ட சிங்கள இராணுவத்தினர் புத்தமத வெற்றிக்கு, பிற மதங்களைச் சுத்தமாகத் துடைத்து எறிந்து இலங்கையை ஒரு புனித புத்த நாடாக மாற்ற விரும்புகின்றனர்.

தமிழ் வீரர்களை மட்டுமல்ல, தமிழ் மக்களையும் கொன்று ஒழிக்கும் வேலையை ஒரு மதக் கடமையாக நினைத்துத் தாக்குகிறார்கள். இப்பொழுது அவர்கள் வெறும் சம்பளச் சிப்பாய்கள் அல்ல, புத்த மத வெறி ஏறிப் போன சிங்கள சிப்பாய்கள், (இலங்கை இராணுவத்திலும், காவல் துறையிலும் தமிழர்கள் ஒழித்துக் கட்டப்பட்டிருக்கின்றனர்).

## தந்தையும் கணவரும்

ஏற்கனவே சந்திரிகாவின் தந்தை பண்டார நாயகா வடக்கு, கிழக்கு மாநிலங்களைத் தமிழர்களின் பூர்வீகத் தாயகம் என ஒப்பி, தந்தை செல்வாவுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட காரணத்திற்காக ஒரு புத்த மத குருவாலேயே சுட்டுக் கொல்லப்பட்விட்டார். அவருடைய- சந்திரிகாவுடைய கணவர் குமாரதுங்க யாழ்ப்பாணம் சென்று தமிழர் தலைவர்களுடன் சமரச பேச்சு நடத்திவந்ததற்காகவே புத்தமத வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இப்படிப் பல நிகழ்ச்சிகள் உண்டு எனவே சந்திரிகா பயப்படுவதிலும் அர்த்தம் உள்ளது.

கிளப்பப்பட்ட புத்தமத வெறியின் இன்னொரு அம்சம் தமிழர்களின் சில இந்து மதக் கோயில்களும், புனித ஸ்தலங்களும் இடித்து நொறுக்கி நிரவப்படுவதாகும். அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் அழிக்கப்பட்ட சைவக் கோயில்கள் முன்னூறுக்கும் மேற்பட்டதாகும். இப்போதெல்லாம் இந்தியத்தமிழர்கள் பிரபலமான கண்டி, கதிர்காமம் கந்தன் கோயிலுக்குச் செல்வதையே மறந்து விட்டார்கள். ஏன்? பழனி கோயிலைப் போல் ஈழத்தமிழர்களுக்குரிய நல்லூர் கந்தசாமி கோயிலே இராணுவத்தாரால் தாக்கப்பட்டது. மாதாகோயில்களும் அதற்கு விதி விலக்கல்ல.

## போலியான தீர்வுத்திட்டம்

இந்த மோசமான சூழ்நிலையில் உலகத்தின் கண்களில் மண் தூவ பலவித பயனில்லாத சமரசத் திட்டங்களை சந்திரிகா பரவ விடுகிறார். ஆனால் அவை அனைத்தும் பௌத்த பீடாதிபதிகள் எதிர்ப்புக்காரணமாக கைவிடப்படுகிறது. அல்லது தமிழர்களுக்கு மேலும் விரோதமாகத் திருத்தப்படுகிறது. உதாரணமாக ஸ்ரீலங்கா எட்டுப் பிரதேசங்களைக் கொண்ட ஒன்றியம் எனத் திருத்தப்பட்டு விட்டது. எனவே இத்தகைய போலித் தீர்வுகளைக் கொழும்பு அரசாங்கத்திடமும், இந்திய அரசிடமும் கூலி பெறும் தமிழர் கட்சிகளும், அமைப்புகளுமே ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன.

பிறகு புத்த பீடாதிகளைக் கேட்க வேண்டுமா? அவர்கள் அதிபர் சந்திரிகாவின் அரசியல் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக் கணக்கில் ஆர்ப்பாட்டம் நடத்தி அதை இதைக் கிழித்தெறிகிறார்கள். எனவே சந்திரிகா அவர்களிடம் அரசியல் தீர்விற்கு வழி விடுமாறு அடிபணிந்து இறைஞ்ச வேண்டியுள்ளது.

## மறைக்கப்படும் உண்மைகள்

புத்த பிட்சுகளின் உயர் மட்ட மஹா சங்கம் தன்னுடைய உத்தரவாக இலங்கை அரசு தமிழர்களுக்கு எவ்வித உரிமையையும் அளிக்கக் கூடாது என உத்தரவிட்டு தீர்மானம் நிறைவேறியுள்ளது இது 1993 நவம்பர் மாதத்திலாகும். அந்த அறிக்கை படிக்கவே ஒவ்வொரு தமிழன் நெஞ்சும் பதறும். அது ஜலந்தரின் இருந்து வரும் புத்த மத பத்திரிகை 'பீம் பத்திரிக்காவில்' நவம்பர் 1993-ல் வந்திருக்கிறது. இலங்கையை புத்த மத நாடாகவே திரும்ப திரும்பக் கூறி அப்பத்திரிகையின் நிருபர் பிப்ரவரி 1996 இதழில் எழுதியுள்ளார். மார்ச் 1996, பீம்பத்திரிக்கா' இதழில் மூதல்பக்கச் செய்தியாகவேவந்துள்ள ஒன்று. நம்மை அன்பின் அடிப்படையில் இருந்த புத்த மதம் எவ்வளவு தூரம் மற்ற அனைத்து மத வெறிகளையும் விஞ்சி நிற்கிறது என்பதை இங்குச் சுட்டிக் காட்டுகிறது. அந்தச் செய்தி ஒருவர் விடாமல் தமிழ்ப் போராளிகள் அனைவரையும் சிங்களப் படை அழித்தொழிக்க வேண்டும் என்ற புத்தமதப் பீடத்தின் உத்தரவு பற்றியதாகும்.

இச் செய்திகள் இந்தியத் தமிழர் கண் முன்னே மறைக்கப்பட்டு வருகின்றன என்பது தான் நமக்குப் பெரும் வேதனை. சிங்களத் தரப்பு வெறியாட்டம் அத்தனையும் மறைக்கப்பட்டுத் தமிழர்களின் உயிர், உரிமைகளைக் காக்கும் போராளிகளை அவதூறு செய்தே பத்திரிகைகள் செய்தி போடுவதைத் தடுக்க முடியாத ஒரு கையறு நிலையில் தாம் உள்ளோம் என்று நினைத்து வேதனைப் பட வேண்டியுள்ளது.

இலங்கை அரசு உலக நாடுகள் பலவற்றில் அனாதைகளாகச் சென்று வேலை செய்து பிழைக்கும் தமிழர்களுக்கு விரோதமாகவும் அரசியல் இராஜ தந்திர ரீதியாகத் தொல்லை கொடுக்கிறது. செஞ்சிலுவைச் சங்கங்கள் போன்றவை செயல்படாமல் தடுத்து நோயாளிகளை மருந்து கூட இல்லாமல் சாகுமாறு செய்கிறது. சமீபத்தில் தமிழர் பகுதிகளுக்கு உணவுப் பொருட்கள் செல்லாமல் தடுத்து பட்டினி போடுகிறது. இவையெல்லாம் அன்புவழி போதித்த புத்தமத தலைவர்களுக்கு ஆனந்தமான காட்சியாக இருக்கின்றன. அரசு சார்பற்ற நிறுவனங்கள் சென்ற நவம்பரில் கூடி இடர்ப் பட்ட மக்களுக்கு தங்களால் என்னசெய்யமுடியும்என்றுஆய்வதற்கான ஒரு கருத்தரங்கு நடத்திய போது அங்கே புத்த மத சிங்கள வெறியர்கள் உள்ளே நுழைந்து அவர்களை அடித்து நொறுக்கியிருக்கின்றனர். ''இங்கே எவனாவது தமிழன் இருக்கின்றானா?'' என்று கூறிக்கொண்டு துளாவியிருக்கிறார்கள். அதில் பங்கு கொண்ட இரண்டொரு மனிதாபிமான சிங்களர்களும் மத வெறியர்களால் கொடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இந்து மதத்தின் பேரால் அரசு நடத்தும் அனைத்து இந்துத்துவ சக்திகளும், இலங்கையில் இந்து மதம் அழிக்கப்படுகிறது என்பதைக் கண்டுகொள்ள மறுக்கின்றன. இதுதான் வரலாற்றில் உள்ள ஒரு வக்கிரம் என்பதா? ●


"ஈழசுதந்திரன்" மாத இதழ்

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தாசேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம் :

நிர்வாகி

"ஈழசுதந்திரன்"

14, சேட் காலனி முதல் தெரு

மூன்றாம் மாடி.

எழும்பூர் சென்னை-600 008

www.padippakam.com

# கொழும்பிலிருந்து... செய்தித் துளிகள்!

(ஜூன்-96)

### மலையகத் தமிழர்க்குப் பட்டை நாமம்

ஸ்ரீலங்காவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் எதுவாக இருந்தாலும் அவற்றின் சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பே இல்லாத காரியங்கள் பல நடைபெறுகின்றன. முக்கியமாகத் தமிழர் நலன் காப்பதாக உலகுக்குப் பறைசாற்றித் தயாரிக்கும் எதுவுமே செயல்வடிவம் பெறாமல் பேழைக்குள் உறங்கி விடுவது இலங்கை வரலாற்றில் புதிய தொன்றல்ல.

இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மலையகப் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமொன்றினைத் தற்போதைய அரசு அறிவித்து — கடந்த ஜூன் மாதம் அரசுப் பணிக்கென ஆட்சேர்ப்புக்காக நேர்காணல் இடம்பெற்று — அதில் கலந்து கொண்ட தமிழ் இளைஞர் — யுவதிகளில் நூற்றுக்கணக்கானோர் தகுதிபெற்றிருந்தும் — 'தமிழர்கள்' என்ற ஒரே காரணத்தால் அவர்கள் நியமனம் வழங்கப்படாமல் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டனர். தெரிவான 96 பேருமே சிங்களவர்கள் ஒரு தமிழனைக் கூட நியமனம் செய்யாமல் புறக்கணித்தது அரசின் திட்டமிட்ட சதியாகவே தோன்றுகிறது.

ஐக்கிய இலங்கை என்ற கொள்கையை ஏற்று சிங்கள அரசை ஆதரிக்கும் மலையகத் தமிழ் மக்களிடையே அரசின் இச்செயல் ஐயத்தை ஏற்படுத்தி உள்ளது. அரசின் அறிவிப்புகள் வெறும் கண்துடைப்பே என்பதை அவர்கள் உணர்கின்றனர்.

### வெளிநாட்டு நிறுவனங்களின் வேதனை

யாழ்ப்பாணம் மீதான இலங்கை இராணுவப் படையெடுப்பால் அகதிகளாக்கப்பட்டுள்ள இலட்சக் கணக்கான தமிழர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்க முடியாமல் இருப்பதாக வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. சிங்கள அரசின் தெளிவற்ற-முரண்பாடான கொள்கைகளும், பாதுகாப்பு விதிமுறைகளுமே அதற்கு இடையூறாக உள்ளன.

### திருமலையில் அச்சம்

திருகோணமலைப் பகுதியில் விசாரணைக்காக 'வெள்ளை வேனில்' அழைத்து செல்லப்படும் தமிழ் இளைஞர்கள் மறுநாள் பிணமாகக் கிடப்பது அப்பகுதித் தமிழ் மக்களிடை அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

### இந்து பரிஷத்தின் கவலை

இலங்கை இராணுவ நடவடிக்கையின்போது, தொண்டமானாறு — செல்லச்சந்நிதி முருகன் கோவில், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் போன்ற பிரசித்தி பெற்ற சைவ ஆலயங்கள் பலவும், யாழ் நகரிலுள்ள மாதா கோயில், மானிப்பாய் கிறிஸ்தவ தேவாலயம் என்பனவும் பெருமளவில் சேதமடைந்துள்ளதாகவும் பத்திரிகைகளில் படங்களுடன் இவை பற்றிய செய்திகள் வெளிவந்துள்ளதாகவும் இலங்கை விஸ்வ - இந்து பரிஷத் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி கூறியுள்ளார்.

### நவசமாஜக் கட்சியின் அறிக்கை

யாழ்ப்பாணத்தில் அகதிகள் ஆக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஏராளமான உணவு வகைகளும் மருந்துப் பொருட்களும் அனைத்து நிவாரணப் பணிகளும் அளிக்கப்படுவதாக இலங்கை வானொலியும், தொலைக்காட்சியும், மற்றும் பத்திரிகைகளும் உண்மைக்கு மாறான செய்திகளைப் பரப்புகின்றன. தொடர்ந்து துயரினை மட்டுமே அனுபவித்து வரும் தமிழ்மக்களைப் பட்டினியாகச் சாகவிடும் நோக்கம் அரசின் இனக் கொலைச் செயற்பாட்டின் ஒரு பகுதியே ஆகும் என்று லங்கா நவசம சமாஜக்கட்சி அறிக்கை கூறுகிறது.

### அதிகாரமில்லா அதிகாரிகள்

கடமையைச் சரிவரச் செய்த காரணத்தால் கைது செய்யப்பட்டார் ஒரு அதிகாரி. காரணம் அவர் ஒரு தமிழர். தமிழர்கள் அதிகாரிகளாக நியமனம் பெறலாம் ஆனால் அவர்கள் தங்களது அதிகாரத்தை பிரயோகித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது; எடுக்கவும் முடியாது. இலங்கை நுவர எலிய கல்வித்திணைக் களத்தின் பணிப்பாளராகப் பதவியில் இருந்த தமிழர், இத்தவறு செய்தகாரணத்துக்காககடமையில் இருக்கும்போதே போலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

### ஏமாந்த தமிழ்க்கட்சிகள்

தமிழ் மக்களின் கல்வி, பொருளாதார, அரசியல் துறைகளில் சிறுசிறு குறைகளாகத் தோற்றம் பெற்ற பல விடயங்கள் ஒட்டுமொத்த அரசியல் பிரச்சினையாகப் பரிணாமம் பெற்று ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி கண்டது.

'நியாயமான முறையில் சிங்கள அரசு தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாட்டாது' என்பதை உணர்ந்த தமிழ்த் தலைவர்களும் இளைஞர்களும் மேற்கொண்ட போராட்டங்களே இன்று யுத்தமாகப் பரிணமித்து இருக்கின்றது.

'ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வாருங்கள் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்வோம், இந்த பூமியில் தமிழர்களும் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழ வகை செய்வோம்'' என்ற சனாதிபதி அம்மையாரின் வற்புறுத்தலை நம்பி சனநாயக நீரோட்டத்தில் இணைந்த தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இன்றுஓர்இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்கள்.

'அரசுக்கு ஆதரவானவர்கள்' என்ற அடைமொழி தவிர ஆக்கபூர்வமான நன்மை எதையும் அவர்கள் அடைந்ததாக இல்லை. இந்த இணைப்பில் உள்ள ஐந்து தமிழ்க்கட்சிக் கூட்டணிகளுக்கு யாழ்ப்பாணம் செல்லவோ, அகதி ஆகிவிட்ட தமிழர்களைப் பார்க்கவோ, அரசின் நிவாரணப் பணிகளைப் பரிசீலிக்கவோ, அனுமதி இல்லாத நிலையில்—புலிகளின் பிரதேசத்தில் இருந்து இராணுவம் மீட்ட பகுதிகளுக்கு வரும் தமிழர்கள் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதாகச் செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன.

தொகுப்பு :
சுந்தரபாண்டியன்

## செய்திச்சரம்

27.5.1996

யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்புப்படையினரை ஆதரிக்கும் தமிழர்கள் நம்பிக்கைத் துரோகிகள். அவர்கள் தண்டிக்கப்படுவர் என்று தமிழில் இதுபோன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பிரசுரங்கள் புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

(தினமணி, தினமலர், கதிரவன், இந்து)

பாகிஸ்தானில் உள்ள இலங்கை தமிழ் எழுத்தாளர் அ. முத்துலிங்கம், தனது சிறுகதைத் தொகுப்புக்காக, சிறந்த வெளிநாட்டுத் தமிழ் எழுத்தாளருக்கான வில்லி தேவசிகாமணி விருதை பெற்றுள்ளாளர்.

(தினமணி)

யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையின் போது இராணுவத்திடம் சரணடைந்த போராளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ரோஷன் களுத்தே சன்டே டைப்ஸ் பத்திரிகையில் தெரிவித்துள்ளார்.

(தினமணி, தினகரன், கதிரவன்)

கடந்த 24ம் தேதி இந்தியாவின் பிரத்தியேக கடல் எல்லையைத் தாண்டி மீன் பிடிக்க வந்த 2இலங்கை படகுகளை இந்திய கடலோர காவல்படை வீரர்கள் கைப்பற்றி, அதில் பயணம் செய்த 12 பேர்களையும் கைது செய்துள்ளனர் என்று கடலோர காவல்படை கமாண்டர் ஆர். கே. வர்த்வா நேற்று கூறியுள்ளார்,

(தினமணி, கதிரவன்)

இராணுவத்திடம் இருந்து யாழ்ப்பாணத்தை மீட்பதற்கு பிரபாகரன் திட்டம் வகுத்துள்ளார். அதற்காக விரைவில் பிரபாகரன் தீவிரமாக தாக்குதல் நடத்துவார் என்று இலங்கை அரசியல் ஆய்வாளர்மன் கருதுகிறார்கள்.

(தினகரன்)

நேற்று முன்தினம் வேலூர் சிறையில் உள்ள புலிகள் தங்களை வேறு முகாம்களுக்கு மாற்றக் கோரியும், தங்களுடன் மனைவியையும் சேர்த்து வைக்க வேண்டுமென்றும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

(கதிரவன்)

# கவிதைச் சரம்

## ஈழம் வரும் நாள்

விடிந்துவிட்ட பொழுது போல்
வடிந்துவிட்ட வெள்ளம் போல்
கூடிய விரைவில் ஈழம்தனை உலகில்
வடித்திடுவோம் கற்பனையல்ல, கனவல்ல.

ஈழம் கைக்கெட்டும் தொலைவிலேயே
ஈடற்ற வானில் அல்ல அந்நிலவாய்
ஈழத்தேன் எமக்குப் பக்கத்திலேயே
ஈக்களுக்கு எட்டா இமயத்திலல்ல

சிந்திய குருதிக்குச் சிறப்புண்டு
சிங்களத்திற்கும் பெரும் இழப்புண்டு
சிங்காரத் தமிழனுக்கும் இயற்கையில்
சிறகுகள் வந்ததை நீயறியாயோ?

ஆதிக்க நாயகர்கள் நாங்களிங்கே
சாதிக்க வந்தால் நீங்கள் எல்லாம்
சேதிக்கப் படுவது தெய்வத்தின் முறைதானே - எமது
சோகத்தின் சோதனை அன்றோடு மறையுமே!

ஆணவம் ஆள, அன்பு வீழ்ந்தோடுவதா?
கானகத்தில் ஈழரோசா 'உதிர்ந்து வாடுவதா?
வானகம் மறையுமோ மானந்தான் குறையுமோ
வாழ்தல், வீழ்தல் மெய்யெனில் ஈழம் ஈட்டுவதும் மெய்யே!

தேடிய ஈழம் வரும் நாள் மண்ணில் நன்னாளாம்
கொடிய அடிமை விலங்கொடியும் நாளும் பொன்னாளாம்
—அன்று
ஆடுவோம் ஆனந்தம் ஆனந்தம் வந்ததென்று!
பாடுவோம் வாழ்க வாழ்க உயிர் ஈழமென்று!!

சோக. செல்வநாதன்,
130 இ. அ. முகாம்,
தோப்புக் கொல்லை,
புதுக்கோட்டை-3.

## தூண்கள் தூங்கலாமா

சோழன் நெடுந்தீவு-

தன்மானமே
உனக்கு
தன்மான மில்லையா?
தமிழா
உனக்கு
தமிழ் பேச வெட்கமா?
நீ
வெள்ளை உடைமையா?
இல்லை
ஆரிய அடிமையா?
மடையா!
அடுத்தவனை வலியவனாய்
ஆக்கிவிட்டு
கனக விசயனின் கதை
ஒரு கேடா?
வாள்வீறு கொண்டு
புதிய
பாரதியாய்...
எரிகிறது ஈழம்
அதில்
குளிர் காயலாமா?
நீ
எதிராதுபோனால்
உனை
நேற்றைய வானரமென
நாளை
கைகொட்டும் அன்றோ
உன்
உறக்கம் போதும்
எழு வீறு கொண்டு
நீ
பழைமையின் புதிய்
வார்ப்புக்களாய்...

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை ராணுவத்தில் சேர்வதும் தற்கொலை செய்து கொள்வதும் ஒன்றே

## சிங்கள இளைஞர்கள் கருதுவதாக பி.பி.சி. தகவல்

இலங்கையில் முறையான அரசு படைகளுக்கு குறைந்தது பத்தாயிரம் பேர்களைச் சேர்க்கும் திட்டத்தை இராணுவம் அறிவித்துள்ளது. இவ்வாண்டு இறுதியில் ஆட்கள் சேர்க்கும் திட்டம் தொடங்கும் என இராணுவ ஆதிகாரிகள் கூறுகின்றனர். இதேபோல ஐந்துமாதங்களுக்கு முன்பு ஆட்களைச் சேர்க்கும் திட்டம் பரந்த அளவில் விளம்பரம் செய்து நடத்தப்பட்ட இயக்கம் தேவையான எண்ணிக்கையில் ஆட்களைக் கவரத் தவறியதை அடுத்துத் தற்போதைய இயக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக அரசுப் படைகள் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ்ப் புலி கிளர்ச்சியாளர்களுடன் போர் புரிந்து வருகின்றன.

இப்பொழுதுள்ள முறையான படைகளின் வலுவை அதிகரிக்கவும், காலியான இடங்களை நிரப்பவும் பத்தாயிரம் கூடுதல் படைகள் தேவைப்படுகிறது என்று அரசு இராணுவத்தின் சார்பாக சரத்குணசிங்க கூறியுள்ளார். இது வெற்றியடைந்தால் இத்திட்டத்தின் மூலம் ஒரு லட்சம் பேர் அடங்கிய இராணுவப் படை இலங்கைக்குக் கிடைக்கும். பயங்கரவாதம் என அவரால் அழைக்கப்பட்ட ஆபத்திலிருந்து நாட்டை பாதுகாக்கப் படைக்கு புதிதாகச் சேரவுள்ளவர்கள் முன் வர வேண்டும் என்று முனசிங்க கூறியுள்ளார். வயக்கே யாழ் தீபகற்பத்தில் தமிழ் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை பல தங்களுக்கு [illegible] லும், இராணுவத்தின் மத்தியில் ஆர்வம் குறைவாகவே உள்ளது. கடந்த 18 மாதங்களில் பதினைந்தாயிரம் இராணுவப் படையினர் தங்களின் பதவியை விட்டு விலகியுள்ளனர். நாட்டின் பல இடங்களில் வேலையின்மை 20 சதவிகிதம் இருந்தாலும் அண்மையில் நடந்த ராணுவத்தின் புதிதாக ஆள் சேர்க்கும் திட்டம் தேவையான பலனைக் கொடுக்கவில்லை.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்ட பத்தாயிரம் இடங்களில் 3500 பேர் தான் தங்களின் பயிற்சியை முடித்தனர். இராணுவத்தில் சேர்வதற்கான பள்ளித் தகுதியை அரசாங்கம் இப்போது குறைத்துள்ளது. மேலும் இராணுவத்தில் புதிதாகச் சேருபவர்கள் முன்பு இருந்தது போல் அவ்வளவு உயரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. வடக்கில் இலங்கை அரசின் இராணுவ வெற்றிகள் காட்டும் கவர்ச்சியான வீடியோப்படமொன்றும் புதிதாக வந்தவர்களைக் கவரத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் 13 ஆண்டுகளாக உள்நாட்டுப் போரில் தங்களது உறவினர், நண்பர்கள் எனப் பலபேர் கொல்லப்பட்டு, காயமடைந்ததை பல இளைஞர்கள் கண்கூடாகப் பார்த்த பின்பும், ஆள் சேர்க்கும் படிவத்தில் கையெழுத்து இடுவது என்பது அத்தனை சுலபமான காரியமாகத் தெரியவில்லை.

முந்தைய ஆள் சேர்க்கும் இயக்கத்தின் போது இலங்கை இராணுவத்தில் சேர இளைஞர்கள் ஏன் முன்வரவில்லை என்பதைக் குறித்து எம்முடைய சிங்கள தமிழ்ப் பிரிவில் பணியாற்றும் சந்தனகீர்த்திப் பண்டார அவர்களை அபுதாஸ் கேட்டபோது அவர் கூறியதாவது:

தற்கொலை செய்ய யார் போவார்? போன முறை பத்தாயிரம் ஆட்கள் சேந்தாங்கள் ஆமியில், அதிலே 600, 500 ஆட்கள் திரும்பி வந்தாங்க. சேர்ந்தவுடனே, டெயினிங் அது இது என்று இல்லாம, ஒரு இரண்டு மாதத்தில் சண்டை நடக்கும் இடத்திற்கு அனுப்புனாங்க. அனுப்பினவுடனே, எல்.ரி.ரி.ஈ உடனே சண்டை பிடிச்ச உடனே ரெயினிங் இல்ல. அது சாகத்தான் நடக்குது. ஆகவே இது தற்கொலைதான்.

## மழை வேண்டி பிரார்த்தனை

இலங்கையில் கடுமையான மின்சார பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து பலத்த (பௌத்த) பிக்குகள் மழை வேண்டி ஒரு வார கால பிரார்த்தனையை நடத்தினார்கள். விரைவில் பருவ மழை பெய்யாவிட்டால் இப்பொழுது நாளொன்றுக்கு 6 மணி நேரமாக இருக்கும் மின்வெட்டு, 18 மணி நேரமாக உயர்த்தப்படக்கூடும். மொத்தமாகவே மின்சாரத்தை வெட்டி இருட்டடிப்பு செய்ய வேண்டிய நிலையும் ஏற்படக் கூடும் என அரசு எச்சரித்துள்ளது. இலங்கையில் மின் தேவை 80 விழுக்காட்டுக்கும் அதிகமான அளவு புனல் மின்சார எந்திரங்களால் நிறைவு செய்யப்படுகின்றது.

வடகீழ் பருவத்தால் பொழிந்திருக்க வேண்டிய மழை ஏற்கனவே பொய்த்து போய் விட்டது. வழக்கமாக மே மாதத்தில் தென்கிழக்கு பருவப் பெயர்ச்சி காற்றில் ஆரம்பிக்கிற மழை இன்னமும் வந்தபாடாக இல்லை.

இலங்கையில் பிரதான நீர் மின் உற்பத்தி நிலையமான லக்சபானாவில் அதிகாரிகள் இடைவிடாத படி. மழை வேண்டும் என்ற ஆராதனையை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் உள்ள- 1982 வரை நடைமுறையிலிருந்த 24 மாவட்டங்களில் புத்தளம் மாவட்டம் இப்போது சிங்கள மாவட்டமாக வைத்துக் கணிக்கப்படுகிறது. ஆனால் 1976க்கு முன்பு வரை அதன் இன விகிதசாரப்படி அது சிங்கள மாவட்டமாக இருக்கவில்லை என்பதைப் பின்வரும் அட்டைவணையால் அறியலாம்:

| ஆண்டு | சிங்களர் | தமிழ் முஸ்லிம் | ஈழத் தமிழர் | மலையகத் தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| 1958 | 34.7 | 41.0 | 18.9 | — | 5.4 |
| 1976 | 37.9 | 38.5 | 19.9 | 2.9 | 0.73 |

1981லோ இது அடியோடு மாறிவிடுவதைக் கீழே காணலாம்.

| ஆண்டு | சிங்களர் | தமிழ் முஸ்லிம் | ஈழத் தமிழர் | மலையகத் தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|
| 1981 | 82.6 | 9.7 | 6 7 | 0,6 | 0.4 |

உள்ளபடி இலங்கையில் சிங்களப் பேரினவாதத்திற்கும் இனவெறிக்கும் முதற்பலியான தமிழ்பேசும் மக்கள் இந்த முஸ்லிம்களே ஆகும். அப்போதைய தமிழ்த்தலைமை தாம் முன் சொன்னவாறு தமிழ்த் தேசிய உணர்வோடு நடந்து கொண்டிருந்தால் முஸ்லிம்கள் சார்பாகவே பேசியிருக்க வேண்டும். ஆனால் இலங்கையின் முழுத்தேசிய வாதத்தை முன்னெடுத்து, சிங்கள தேசிய இனவாதம் அதற்கு வஞ்சகமாக அப்போது தமிழர்களையே முன்னிருத்தி தாம் பின்னின்ற காரணத்தால், நாட்டு நலனை உத்தேசித்தும், நாட்டு மக்களில் பெரும்பாலோர் அடக்குமுறைக்கு ஆளாவதைத் தடுக்கும் முகமாகவும் தமிழ்த் தலைமை தம்மையறியாமலேயே சிங்கள தேசிய வாதத்திற்குத் துணை போனது. அதைப் போலவே 1948-லும் சொந்த நலன்களுக்காக கொழும்பில் மையப்பட்ட தமிழ்க் காங்கிரஸ் கட்சி-தமிழ்த்தலைமை மலையகத் தமிழர்களைக் கைவிட்டதால் இனம் - மதம் கடந்த அளவில் தமிழ்த் தேசியம் உருவாவதைத் தடைப்படுத்தியது. மொத்தத் தமிழ்த்தேசிய நலனுக்கும் பலத்திற்கும் அவரவர் அளவில் துரோகமிழைத்திருந்தாலும் – ஈழத்தமிழர், மலையகத் தமிழர், இஸ்லாமியத் தமிழர் என்ற இம்மூன்று தரப்பாருமே மற்றவரே அதற்குக் காரணம் என்று பரஸ்பரம் பழிபோடும் நிலையே உருவாக்கிவிட்டது.

ஆம்; இம்மூன்று தரப்பாருமே வாய்ப்புக் கிடைக்கும் போது மற்றத் தரப்புக்குப் பாடம் புகட்டுவதாய்க் கூறிக் கொண்டு சிங்களப் பேரினவாதத்திற்குத் துணைபோகும் அவலம் தொடர்ந்தது.

இதன் அடிப்படைக் கோளாறு கொழும்பில் மையப்படுத்தப்பட்ட அதன் தலைமைகள் தாம் என்பதையும் மறந்து விடக்கூடாது. கொழும்பில் மையப்படுத்தப்பட்ட இஸ்லாமியத்தமிழர் தலைமையும், தமிழ்பேசும் மக்களின் பலத்தைச் சிதைக்க வேண்டுமென்பதற்காகவே சிங்களக்கட்சிகளால் வழங்கப்பட்ட பட்டம் பதவிகளுக்கு ஆட்பட்டு, ஏனையத் தமிழர் தலைமைகள் செய்த அதே தவறைச் செய்யமுற்பட்டதும் தமிழ்த்தேசிய இனஒற்றுமைக்கு ஊறாகிவிட்டது.

(தொடரும்)

# மாணவர் மன்றம்: ஈழசுதந்திரனுக்கு ஒரு வாசகர் கருத்து

இலங்கையில் தமிழனுக்கு ஏற்பட்டுள்ள நிலை, முழுவதுமே சரியாக யாருக்குமே தெரியவிட்டாலும், ஒரு பகுதியையாவது நாம் அனைவரும் அறிந்து கலங்கிப்போய் உள்ளோம்.

நாட்டில் சுமார் பதினைந்து வருட காலமாக ஏற்பட்டிருக்கும் போர் மற்றும் இயக்கங்களின் நடவடிக்கைகளால் அங்கு ஒரு குறிப்பிட்ட வயதுகட்கு இடைப்பட உள்ளவர்கள் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இடைவெளியானது இளசுகளை எண்ணிக்கையில் மட்டும் பொறுத்ததாக இல்லாது அவர்களது கல்வி, பொருளாதார மற்றும் கலாச்சார வளர்ச்சி ஆகியன உட்பட சகல இழப்புக்களையும், பின்னடைவுகளையும் உள்ளடக்கும், இந்தப் பதினைந்து வருட கால தோற்றுவிப்பு இடைவெளி (generation gap) இத்துடன் முடிந்து விட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது, அது 20—25 ஆகுமோ, அல்லது இன்னும் அதிகரிக்குமோ, யார் அறிவார், ஏனெனில் நாட்டில் உள்ள முக்கியமான பிரச்சினை இன்னும் முடிவதற்கான சரியான அறிகுறிகளே தெரியவில்லை! இது இன்னமும் நீடித்துக் கொண்டே போகின்றது.

இருப்பினும், என்றோ ஒரு நாள் தீர்வு வரத்தான் செய்யும். ஆரம்பம் என ஒன்று இருப்பில் முடிவுஎன்று ஒன்றும் இருக்கும். (every action has its own reaction, இது இயற்கை நியதி, அவ்வாறு ஒரு தீர்வு, எப்போதோ ஒரு நாள், வந்ததும் நாம் எல்லோரும் அந்நாட்டிற்குத் திரும்பிப் போக வேண்டியவர்கள்தான். அவ்வாறு சென்ற பின்பு நாம் தான் ஈழத்தின் சகல துறைகளிலும் புதிதாகக் கட்டி எழுப்பவேண்டிய நிலைப்பாடு இருப்பதை எல்லோரும் உணர வேண்டும்.

அப்படியானால் அந்தப் பொறுப்பு இங்குள்ள வயதுவந்தோருக்குத்தான் என்றெண்ணலாகாது. அவ்வாறான புதியதோர் தமிழ்தாயகத்தைக் கட்டியெழுப்பும் முகைய பணி இங்குள்ள மாணவமணிகளிலேயே தங்கியுள்ளது. இவ்வித்துக்களும் இளம்பயிர்களும் தான் நாடுசென்றதும் வேரூன்றிப் பற்றிப் படர்ந்து கட்டியெழுப்ப வேண்டும். இந்த உண்மையைச் சற்று ஊன்றிச் சிந்திக்கும் யாவராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

எனவேதான் இதனை முழுமையாக நம்பும் நமது ஈ.ஏ.ம. கழகம் இங்கு அகதிகளாக உள்ள சகல கல்வி பயிலும் மாணவர்களது விடயத்திலும், விசேடமாக கல்வியில், முன்னுரிமை கொடுத்து தொண்டாற்றி வருகிறது.

இதன் அடிப்படையில் முகாம் மாணவர்களை மன்றங்களாகக் கட்டி பல்வேறு துறைகளிலும் முன்னேற்றத்துக் காகப் பாடுபட முயற்சிக்கத் தூண்டுகோலாக இருப்பதுடன் அவ்வாறாகச் செயல்படும் மன்ற மாணவர்கட்கு பிரத்தியேகமாக உதவிகளையும் கழகம் செய்திடத் தயாராக உள்ளது.

இந்த இடத்தில் 'ஈழசுதந்திரன்' மௌனமாக இருப்பது நல்லதல்ல. அவனுக்கும் நிறைய கடமைகள் உண்டு. கழகத்துடன் சேர்ந்து தோள் கொடுத்து உதவும் முகமாக இந்த மாணவர் மன்றங்கட்கு என ஒரு பகுதியை ஈழசுதந்திரனில் ஆரம்பித்து அதன் வாயிலாக எமது மாணவச் செல்வங்களின், 'வேோட்ஸ் வேத்' தால். ''bloom to be unseen ''என்று வர்ணிக்கப்பட்டவாறு, திறமை இருந்தும் வெளிக் கொணரப்படாது மறைந்து கிடக்கும் அவர்களது திறமைகளை வெளிக்கொணர வாய்ப்பளித்தும், ஊக்கம் அளித்தும், புதிய புதிய கருத்துக்களையும் விடயங்களையும் அவர்களுக்குப் புகட்டியும் ஏன் தனது கடமையான பணியினை 'ஈழசுதந்திரன்' செய்யக் கூடாது என்பதுதான் எனது கேள்வியாகும்.

ஆதலால் தயவு செய்து ''மாணவர் மன்றம்'' என ஒரு பகுதியை விரைவில் ஆரம்பித்து அதற்கென ஈழசுதந்திரனில் முழுப் பக்கம் ஒதுக்கி அந்தப் பக்கத்தில் மாணவர்களின் படைப்புகள், அவர்களது சகல துறைகளிலுமான முன்னேற்றத்துக்கும் உகந்த விடயங்களைச் சேர்த்துப் பிரசுரித்தும், மற்றும் கல்வியோடு (அது கலை ஆகிலும் சரி, விஞ்ஞானம் ஆகிலும் சரி) சம்பந்தப்பட்ட புதுப் புதுக் கருத்துக்களையும் யோசனைகளையும் இந்தப்பக்கங்கள் மூலமாக வெளிக் கொணர்வதன் மூலம் மாணவர்கட்கு உதவிடலாம்.

எனவே இத் தொண்டினைச் செய்ய ஈழசுதந்திரன் விரைவில் முன்வந்திடுவானா?

பொ.ச. ஜெயராஜ்
கிருஷ்ணகிரி

(மாணவர்களிடமிருந்து படைப்புகள் வராதது தான் குறையே தவிர, 'ஈழசுதந்திரன்'இடம் கொடாமல் இருந்ததில்லை. புதிய கருத்துக்களை -புதியவர்களை ஊக்குவிக்க 'ஈழசுதந்திரன்' எப்போதும் தயாராகவே உள்ளது. போதிய ஆக்கங்கள் வராவிடில் நாம் என்ன செய்வது?—ஆசிரியர்)

படிப்பகம்

www.padippakam.com




யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. ❋ இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது வாசகர்களே! குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.

கி. குமணன்-நெல்லை-1.

கேள்வி : இலங்கையில் மனிதவுரிமைகளை மீறியதாக சிறீலங்கா அரசின் மீதும், விடுதலைப்புலி அமைப்பின் மீதும் சர்வதேச மன்னிப்புச் சபை ஒரு சேரக் குற்றம் சாட்டியிருக்கிறதே ?

பதில் : உயிருக்குப் பயந்து உண்மையைச் சொல்லாமல் இருப்பதற்கு அது ஒன்றும் தமிழர் அமைப்பு இல்லையே !

K.R. ரகீம்-சேதுபாவாசத்திரம்.

கே : உள்நாட்டு யுத்தத்தால் சீரழிந்த யாழ்ப்பாணத்தைச் சீரமைக்க சிறீலங்கா அதிபர் சந்திரிகா குமாரதுங்க சர்வதேச நிதியுதவியைக் கோரியுள்ளது சரியா ?

ப : நன்றாக இருந்த யாழ்ப்பாணத்தைச் சீரழித்தவர்கள், சிறீலங்கா அரசும் சிங்கள ராணுவமுமே. எனவே புனரமைக்கும் செலவு முழுவதையும் அவர்கள் ஏற்பதுதான் முறை சர்வதேச சமுதாயம் அதை ஏற்பதென்றால், அதற்குரிய தண்டனையையாவது இவர்கள் ஏற்க வேணடும்.

பொன். இலங்கேஸ்வரன்-

கே : கதிர்காமரின் டில்லி விஜயம் வெற்றியா ? தோல்வியா ?

ப : இரண்டுமில்லை. ஒரு வேடிக்கை அரங்கேற்றப் பட்டிருக்கிறது. ஆனால் சிரிப்பார்தான் யாருமில்லை.

இ. பத்மநாபன்-
நாகர்கோயில்.

கே : கதிர்காமர் முதலில் சென்னைக்கும் வருவதாய் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் வரவில்லையே ஏன் ?

ப : டில்லியில் தமிழர் என்று சொல்லிக்கொண்டு ஆங்கிலத்தில் பேசினால் போதும். சென்னையில் என்றால் தமிழில் பேசவேண்டியது வருமே : குட்டு வெளிப்பட்டு விடுமே !

R.P. மித்ரா-சென்னை-4.

❋கே : யாழ்ப்பாணம் கைவிட்டுப் போன பிறகும் ஈழம் சாத்தியம் என்று கருதுகிறீர்களா ?

ப : சிங்களச் சிறிலங்காவை உருவாக்கி, தமிழ் ஈழத்தை உறுதி செய்தவர்கள் சிங்களவர்கள். ஈழம் உதயமாகும்வரை அவர்கள் ஓய மாட்டார்கள்.

# ஈழத் தமிழ் அகதி மாணவர்களுக்கு கல்லூரி ஒதுக்கீடுகளை மீண்டும் வழங்கிய முதல்வர் கலைஞருக்கு ஈ.ஏ.ம.க. நன்றி

**திரு ச. செ. சந்திரகாசன் அறிக்கை**

இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்கு தமிழகக் கல்லூரிகளில் 1989 முதல் 1991 வரை வழங்கப்பட்டு, இடைநிறுத்தம் செய்யப்பட்ட தனி ஒதுக்கீடுகளை மீண்டும் வழங்க ஆணைபிறப்பித்த முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, திரு. சா. செ. சந்திரகாசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழ் அகதி மாணவர்கள் தமிழகத்தில் கல்லூரிக்கல்வி மற்றும் தொழில் நுட்பக்கல்வி உட்பட எல்லாத் துறைகளிலும் உயர் கல்வி பெற்றிட ஆணைபிறப்பித்து உதவிய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும், கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்கும் ஈழத்தமிழ் மக்கள் சார்பில் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனப்படுகொலையிலிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்களுக்கு உலகில் சிறந்த மறுவாழ்வுத் திட்டமாக கல்விக்கான வசதிகள், தமிழக மாணவர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் 1984 ஆம் ஆண்டில் இருந்துவழங்கப் பட்டுவந்துள்ளது. துரதிருஷ்டவசமாக இவ்வசதிகள் 1991 ஆம் ஆண்டில் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப் பட்டன. இதனால் மிகப்பெரிய அளவில் ஈழத்தமிழ் அகதி மாணவர்களின் கல்வி பாதிப் படைந்தது. ஒரு தலைமுறையே சீரழிந்து விடுமோ என்று அஞ்சத்தக்க அளவுக்கு அவர்களின் கல்வி பாதிப் படைந்தது.

ஈழத்தமிழர்கள், பல்லாயிரக்கணக்கான உயிர் இழப்புக்கள் மட்டுமல்லாது, தங்கள் உடைமைகள், வீடுகள் அனைத்தையுமே இழந்த போதும் துவண்டுவிடவில்லை. ஆனால் தமிழகம் தாயுள்ளத்துடன் கொடுத்துவந்த கல்வி வசதிகள் இடைநிறுத்தப்பட்ட போது, அதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல் துவண்டு விட்டனர். எதிர்காலமே இருண்டுவிட்டதோ? இனி எமக்கு உய்வில்லையோ? என்று விரக்தியுற்றிருந்த வேளையில் தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் அந்தத்தமிழ் அகதி மாணவர்களுக்கு கல்விக் கண்களை வழங்கி ஈழத்தமிழ்ச் சமுதாயத்திற்கே உயிர் கொடுத்துள்ளார்கள். இதற்கு ஈழத் தமிழர்கள் என்றும் நன்றி உள்ளவர்களாக இருக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் இத்திட்டத்தின் கீழ்பெற்றிடும் கல்வியறிவை, சிதைந்து போயுள்ள தங்கள் தாயகத்தைக் கட்டியெழுப்பிடப் பயன்படுத்திட வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு கிடைத்துள்ள இந்த வரப்பிரசாதத்திற்கு தமிழகத்திற்கும், இந்தியத்தாயகத்திற்கும் தங்களது நன்றிக்கடனைத் தெரிவிக்கும் வகையில் ஈழத் தமிழர்கள் தங்களால் தமிழக மக்களுக்கோ, அரசுக்கோ எவ்விதத் தீமைகளும் ஏற்படாவண்ணம் நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு, ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பில் அதன் நிறுவனர் சா. செ. சந்திரகாசன் விடுத்த அறிக்கையில் கூறியுள்ளார்.




கல்லூரிக் கல்விபெற இலங்கைத்தமிழ் அகதி மாணவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை அகற்றும்படி சென்ற இதழ் முதல் பக்கத்தில் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் வெளியிட்டிருந்த கோரிக்கையை பிரசுரித்திருந்தீர்கள். அதை ஏற்று கலைஞர் அரசு கல்லூரிக் கல்வித் தடையை அகற்றியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

ஏ.பி. கோணேஸ்வரன், மதுரை-1.

இருள் கிழிக்கும் சூரியன் போல, முகில் கிழிக்கும் முழுமதி போல, தடை உடைத்தெழும் வெள்ளம் போல கலைஞர் அரசு உதயமானதாக தமிழீழதாசன் எழுதியிருந்த கவிதை அருமை.

வரத. கோவிந்தராசன், சென்னை-84.

''லெபனானுக்கு இரக்கம் ஈழத்தமிழருக்கு இறுக்கமா?'' என்ற தலைப்பில் அறிஞர் சாலையார் எழுதியிருந்த கட்டுரை சர்வதேச சமுதாயத்தின் கண்களைத் திறக்குமா?''

K.R. ரவிச்சந்திரன், விருதுநகர்.

''ஈழத் தமிழர்கட்கு நல்ல தீர்ப்புக் கிட்ட இந்திய அரசியல் தலையீடு தேவை'' என்ற 'கேயார்' கட்டுரை பார்த்தேன். இந்திய அரசு தலையிட்டு ஏற்கனவே மூக்குடை பட்டது போதும்.

W.R. தேசிகன், சென்னை-49.

அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை நிறுத்தும்படி கலைஞர் சிறீலங்கா அரசுக்கு அறிவுரை சொல்வதோடு நிற்கக்கூடாது, ஈழம் பிறக்கத் தன்னாலான உதவிகளைச் செய்ய வேண்டும். அதுதான் ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

ஆ. கணேசலிங்கம், திருச்சி-3.

### யாழ் திரும்பிய மக்களுக்கு

# நிவாரணப் பொருள் கிடைப்பதில் தாமதம்! நெருக்கடி! மோசடி!

யாழ்நகருக்கும் வலிகாமம் பகுதிக்கும் திரும்பிச் சென்ற மக்களுக்கு அரசாங்கம் நிவாரண உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும் அத்தியாவசிய பொருள்களை பெறுவதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர்.

காங்கேசன் துறையிலும் யாழ்நகரில் கண்டிக்குழியிலுமாக இரு கூட்டுறவு மொத்த விற்பனைநிறுவனக் கிளைகள் இயங்குகின்றன. காங்கேசன் துறை கிளைக்கு மக்களினால் பெருமளவுக்குச் சென்று பொருள்களை வாங்க முடியாதிருக்கிறது. கண்டிக்குழியில் பெருமளவு பொருள்களை களஞ்சியப்படுத்தி வைக்கமுடியாத ஒரு சிறு இடத்திலேயே கூ.மொ.வி. கிளை இயங்குகிறது. இதனால் அங்கு கொண்டு வரப்படும் பொருள்கள் சொற்ப நேரத்துக்குள்ளேயே விற்பனையாகி விடுகின்றன. இங்கு கூட பொருள்களை மக்கள் வாங்குவதற்கு 'கியூ'வில் நின்று 'டோக்கன்' எடுக்கவேண்டும். நிலையத்திற்கு அண்மையாக இருப்பவர்கள் நேரகாலத்துடன் வந்து 'டோக்கன்' எடுத்து பொருள்களை வாங்க முடிகிறது போக்குவரத்துப் பிரச்சினை பாரியதொன்றாக இருக்கும் நிலையில் தூர இடங்களில் உள்ள மக்கள் நேரகாலத்துடன் வந்து 'டோக்கன்' எடுக்க முடியாதிருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சும் சொந்தப் பிரகிருதிகளும் இன்னமும் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் முன்கூட்டியே வந்து டோக்கனை எடுத்து தூர இடங்களில் இருந்து அலைக்கழிந்து பறந்தோடி வருபவர்களிடம் 75ருபாவுக்கு அதனை விற்பனை செய்கிறார்கள். அத்துடன் பொருள்களை கூ.மொ.வியில் குறைந்த விலையில் வாங்கி அதிகூடிய விலையில் இப்பிரகிருதிகள் விற்பனை செய்கிறார்கள்.

வெள்ளைப்பூண்டு ஒரு கிலோ 800 ருபாவாகவும், கோப்பி ஒரு கிலோ 300 ருபாவாகவும். உருளைக்கிழங்கு 1 கிலோ 240ருபாவாகவும், தேங்காய் எண்ணெய் ஒரு போத்தல் 60ருபாவாகவும் இவர்களினால் விற்கப்படுகிறதாம். தேயிலையைபெறுவது பெருஞ் சிரமமாகவுள்ளது.

கூ.மொ.வி.யில் குடும்ப அட்டையொன்றுக்கு மூன்று கிலோ அரிசி ஒரு கிலோ 80

(12ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

### இலங்கைத் தமிழர் பிரச்சினையில்

# முந்தைய அரசின் மௌனம் நீடிக்கக் கூடவே கூடாது

## தில்லிக்கு 'தினமணி' நாளேடு கோரிக்கை

மத்திய அரசிலும், தமிழக ஆட்சியிலும் ஒரே சமயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் - இலங்கை அரசுக்கு திகைப்பை ஏற்படுத்தியிருக்குமானால், அது புரிந்து கொள்ளக் கூடியதே. இதன் விளைவாக இலங்கையின் வெளிநாட்டமைச்சர் கதிர்காமர் தில்லிக்கு வந்து - பிரதமர் தேவகௌடா, வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஐ.கே.குஜ்ரால் மற்றும் தொழில் அமைச்சர் முரசொலிமாறன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தி விட்டுச் சென்றிருக்கிறார். கொழும்புக்குத் திரும்புவதற்கு முன், தில்லியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்— தில்லிப் பேச்சுவார்த்தைகளில் அவர் திருப்தி அடைந்திருப்பதற்கான அடையாளங்கள் தென்படாமல் போகவில்லை. ''இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாது என்ற உறுதிமொழியைப் பிரதமர் கௌடா மீண்டும் வலியுறுத்தியதாகவும்'' கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார். இந்த உறுதிமொழியை எந்த அரசும் வழங்கவே செய்யும். அதுவே முறையுங்கூட. ஆனால், புதிய ஆட்சி அதே பழைய 'மௌனக்' கொள்கையைக் கடைப்பிடிக்குமெனக் கூறுவதற்கில்லை. எனினும், விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையைப் புதிய அரசு நீடித்திருப்பதைக் கொண்டு, பழைய கொள்கையே நீடிக்குமென்ற முடிவுக்கு வருவதற்கில்லை. ''தடையை நீடிப்பதென்ற ஐக்கிய முன்னணியின் முடிவுக்குத் தி.மு.கவும் சம்மதித்துள்ளது. எனவே விடுதலைப்புலிகளுக்கு தில்லி உதவிகளை அளிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை'' என்று இலங்கை அமைச்சரிடம் கௌட விளக்கம் அளித்திருக்கிறார். ஆனால், இதற்கு ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து (பழைய ஆட்சியைப் போல) புதிய அரசு கவலைப்படாது என்று அர்த்தமாகாது.

ஐ.மு.வில் இடம்பெற்றுள்ள தி.மு.க.வின் முதல்வர் இப்பிரச்சினையில் தமது தெள்ளத் தெளிவான கருத்தைத் தெரிவித்துள்ளார். ''இலங்கைப் போராளிகள் வேறு - இலங்கைத் தமிழர்கள் வேறு. இலங்கைத் தமிழர்கள் குறிப்பாக ஈழத்தமிழர்கள் அமைதியாகவும், அவர்களுக்கு உரிய உரிமைகளோடும் வாழவேண்டுமென்பதில்- தி.மு.க.வுக்கும், அதன் தலைவனாகிய எனக்கும் எவ்விதக் கருத்து மாறுபாடும் இல்லை. அதிலும், குறிப்பாக அப்பாவித் தமிழர்கள் - ஈழத்தில் கொல்லப்படுவதும், வாழ முடியாத சூழ்நிலையில் அவதிப்படுவதும் நீண்டகாலமாகவே கவலையை அளிக்கக் கூடிய நிகழ்ச்சிகள் ஆகும். அதற்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்போம்'' என்று சென்னையில் செய்தியாளர்களிடையே கருணாநிதி கூறியிருக்கிறார். தமிழக மக்களின் உணர்வுகளைக் கருணாநிதி அப்படியே எதிரொலித்திருக்கிறார்.

கடந்த ஏழுமாத காலமாக இலங்கையின் முப்படைகளுக்கும் - புலிகளுக்கு மிடையே நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில் - பலப் பரீட்சையில் எந்தத் தரப்பின் கை ஓங்கியிருக்கிறது என்பது வேறு விஷயம். ஆனால், இதில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருப்பதும் - லட்சக்கணக்கானோர் சொல்லொணா அல்லல்களுக்கு உள்ளாகியிருப்பதும் சோகமயமான உண்மை. எனவே, காலவரையற்ற இப்போராட்டத்தில் ஈழத் தமிழினமே அழிவதைப் பார்தம் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கமுடியாது. ''இப்பிரச்சினையில் (மத்தியில் அமையும்) புதிய அரசின் மூலம் அரசியல் ரீதியான தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழகஅரசு மேற்கொள்ளும்'' என்று மே இறுதியில் கருணாநிதி சட்டப் பேரவையில் கூறியிருப்பது நினைவுகூரத் தக்கது. எனவே, கௌட அரசு- ஈழத் தமிழர் பிரச்சினையில்- பழைய வேடிக்கை பார்க்கும் கொள்கைக்குப் பதிலாக-ஆக்கபூர்வமான புதியகொள்கையை கடைப்பிடிப்பது அவசியம். இதுவே தமிழ் மக்கள் கௌட அரசிடம் எதிர்பார்ப்பதுமாகும்.

இவ்வாறு 'தினமணி' 25—6—96 நாளிதழ் ஆசிரியத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### வடபகுதி நிவாரணப்பணி

# அரசின் கெடுபிடிகளுக்கு மேலை நிறுவனங்கள் கண்டனம்

வடபகுதி அகதிகளுக்கான நிவாரண வேலைகளில் ஈடுபட பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் அரசின் தெளிவற்ற கொள்கைகள் என்பன இடையூறாக இருக்கின்றன என வடபகுதியில் இயங்கிவரும் மேலைத்தேய உதவிவழங்கும் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

புலிகளின் கைகளைச் சென்றடைந்து விடும் என்ற அச்சத்தின் காரணமாக மீட்கப்படாத பகுதிகளுக்கான அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தில் கடுமையான தடைகள் அமுலில் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உதவி வழங்கும் நிறுவன அதிகாரிகளின் வடபகுதி விஜயங்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் மேற்படி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

எம். எஸ்.எவ். நிறுவனத்தின் இணைப்பதிகாரியான பிரான்சிஸ்கோ முனோஸ கருத்துத் தெரிவிக்கையில் வடபகுதி அகதிகளுக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்பாக தற்போதைய அரசுக்கு தெளிவானதொரு கொள்கையில்லாமல் இருப்பதே தற்போதைய முக்கிய பிரச்சினைகளில் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

உதவி வழங்கும் நிறுவன அதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில், சமையலறைப் பாத்திரங்களை வடபகுதிக்குக் கொண்டு செல்வதற்கான அனுமதியைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. புலிகள் இவற்றைப் பயன்படுத்தி குண்டுகள் தயாரிக்கிறார்கள் என்பதே இதற்கான காரணமாகச் சொல்லப்படுகின்ற போதிலும், உதவி வழங்கும் நிறுவனங்களினால் விநியோகிக்கப்படும் இத்தகைய பாத்திரங்களையே அவர்கள் அபகரிக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிலர் உண்மையில் உதவி வழங்க விரும்புகின்றனர், ஆனால் சிலர் அதைத் தடை செய்கின்றனர். மக்கள் வடபகுதி நிலைமைபற்றி ஒன்றில் அறியாதவர்களாக இருக்க வேண்டும் அல்லது அக்கறையில்லாதவர்களாக இருக்க வேண்டும். அரச மற்றும்உதவி வழங்கும் நிறுவனங்களிடையே மாட்டிக் கொண்டு நீங்கள் தத்தளிக்க வேண்டியிருக்கிறது.

மேலும் நிவாரணங்கள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தடைக்கு பாதுகாப்பு நிலைமைகளே காரணம் என பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்

## தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி தொடர்பான பொது அறிவித்தல்

அன்புடையீர்,

தாயக மண்ணைவிட்டு புலம் பெயர்ந்த வேறு நாடொன்றில் வாழும் ஈழ ஏதிலி மக்களின் நலன் கருதிய பல்வேறு பயன்பாடுமிக்க செயற் திட்டங்களை ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம் செயற்படுத்தி வருகின்றது. அவ்வரிய மனித ஆற்றல் மேம்பாட்டிற்கான திட்டங்களில் ஒன்று தான் ''தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவப் பயிற்சி'' என்கின்ற ஒரு உயர் பயிற்சித் திட்டம். இதையொத்த அரிதான பயிற்சிகள் பல்கலைக்கழக மட்டத்திலும், உயர் நிர்வாக அதிகாரிகள் மட்டத்திலுமே வழமையாக நடாத்தப்படும். அதை விடுத்து தனியார் கல்வி நிறுவனங்கள் சிலவும் இவ்வகைப் பயிற்சிகளை நடாத்துகின்ற போதிலும் பயில நீங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை கட்டணமாகச் செலுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. இத்தகைய பணச் செலவு மிக்க அரிய பயிற்சியை ஈழ அகதிகள் பயன்படத்தக்கதாக இலவசமாக இவ்வாண்டும் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் நடாத்திட எண்ணியுள்ளது. எனவே அப்பயிற்சியில் கலந்து பயன்பெற விருப்பமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தன்னைத் தானே அறிந்து கொள்ளவும், தன் உள்ளார்ந்த ஆற்றலை உணர்ந்து தனது ஆளுமையைவளர்த்துக்கொள்வதன் மூலம் ஒரு சிறந்த செயலாற்றல் மிக்க நாட்டுக்குகந்த நற்குடிமகனாக ஒருவரை புடமிடத்தக்கது இப்பயிற்சி நெறி. தலைமைப் பண்பின் சிறப்பியல்புகளாக மக்கள் நடத்தைகளை மாற்றக்கூடிய, ஆளக்கூடிய ஆற்றல்களை அளிக்கவல்லதான இப்பயிற்சி அகதி முகாம்களில் மட்டுமல்ல நாடு திரும்பிய பின்பு அங்கு உங்களை ஒரு சிறந்த பயிற்றுநராகவும், மற்றவர்களின் முன்னேற்றத்திற்கு வழி காட்டுபவராகவும் மாற்றும் ஒரு கருவியாக அமையும்.

கழகத்தில் இரண்டாண்டு காலம் சேவையை நிறைவு செய்துள்ள கழகத் தொண்டர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம். அகதி முகாம்களில் சேவையாற்றும் மற்றத் தொண்டர்களும் 2ஆண்டு காலம் சேவையை நிறைவு செய்திருப்பின் தங்கள் அமைப்புகளின் அனுமதியுடன் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு நாள் நிறைவு பெற்றதும் விண்ணப்பம் செய்தவர்கள் நேர்காணப்பட்டு பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவர்.

குறிப்பு:- கடந்த காலங்களில் மேற்படிப் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களும் தெரிவாகி பயிற்சி நெறியை இடைநிறுத்தியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் வந்தடைய வேண்டிய கடைசி நாள்: 15-08-96.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்,
இல. 14, சேட் குடியிருப்பு,
முதல் தெரு,
மூன்றாம் மாடி,
எழும்பூர்,
சென்னை - 600008.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவாகவும் வெளியில் விற்பனை செய்யப்படுகிறது. குடும்ப அட்டைக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய் லிட்டர் ஒன்றுக்கு 25 ரூபா வீதம் வழங்கப்படுகிறது.

திரும்பி வந்த மக்களுக்கு ஒரு மாதத்தில் ஒரு தடவையே குடும்ப அட்டைக்கு இலவச நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. 5 பேரடங்கிய ஒரு குடும்பத்துக்கு 9 கிலோ அரிசி, 1கிலோமாவு, 6 கிலோ சீனி, 8 கிலோ பருப்பு, ஒரு ஸக்ஸ் பிறே ஆகிய பொருள்கள் இவ்வாறாக வழங்கப்பட்டிருக்கின்றன.

இது இவ்வாறிருக்க குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு செல்ல விரும்புவோர் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இயங்கும் சிவில் நிருவாக அதிகாரியிடம் அனுமதி பெறவேண்டும். நோயாளர்கள் அரச ஊழியர், உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கே தற்போது அனுமதி வழங்கப்படுகிறது.

யாழ்குடாநாட்டில் மாலை 6 மணிக்கு பின்னர் மக்கள் எவரும் வெளிச்சங்களுடன் வெளியில் செல்லக்கூடாது என்று பணிக்கப்பட்டிருக்கிறது.

### மைக்கேல் ஜாக்சன் வாங்கிய கோட்டை

புகழ்பெற்ற பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் பிரான்சிஸ் நாட்டின்தலைநகரான பாரீஸ் அருகே ஒரு கோட்டையை 25 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்; 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இக்கோட்டையில் 7 கோபுரங்கள் 82 அறைகள், ஓர் அகழி ஆகியவை இருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

# மயான பூமியின் தமிழ்ப் பகுதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிகரான சக்தி வாய்ந்த கூட்டாட்சியை வழங்குவேன் என்று தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டியதுடன், நியாயமாக நடந்து கொள்கிறார் என்று உலகத்தையும் நம்ப வைத்தவர். அந்த நம்பிக்கையைப் பயன்படுத்தி இன்று புலிகளின் தவறுகளைக் காட்டியே தமிழ் மக்களையும் உலகத்தையும் ஒருசேர ஏமாற்றுகிறார் சந்திரிகா.

### இனவாத ஆதிக்க சதித்திட்டம்

புலிகளைப் பயங்கரவாதிகள் என்று உலகத்தின் முன் காட்டி, அவர்களை ஒடுக்குவதாகச் சொல்லிக் கொண்டு முழுத் தமிழ் இனத்திற்கும் எதிராகவே அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார்.

தான் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் அவர் நிறைவேற்றவில்லை. கூட்டாட்சி பற்றி ஆரம்பத்தில் அவர் கூறியதை மறுத்திருப்பதோடு, இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே இருந்து வந்த உரிமைகளையும் கெடுப்பதிலும் திட்டமிட்டு ஈடுபட்டு வருகிறார்.

ஒற்றையாட்சித் திட்டத்தை மேலும் இறுக்கமாக்கி ஒருங்கிணைந்த தமிழ் மாகாணத்தைப் பிரித்து, பாரம்பரியத் தமிழ்ப் பகுதிகளைச் சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து, தமிழரின் தேசியச் சித்திரத்தையும் சிதைத்து முடித்துவிடப் பார்க்கிறார்.

இந்த வஞ்சகத் திட்டத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முன்வராவிட்டால், புத்த பிக்குகளைத் தூண்டிவிட்டு, புதிய இனக்கலவரம்-தமிழருக்கெதிரான இனப்படுகொலை நிகழும் என்றும் மிரட்டி வருகிறார். தமிழ் மக்களைப் பயமுறுத்தியே சிங்கள இனவாத ஆதிக்கத்தைத் திணிக்க முயற்சிக்கிறார்.

### டில்லித்தூதின் உள் நோக்கம்

எனவே, கதிர்காமர் மூலம் தமிழரைக் கொண்டே தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு நல்லாதரவு தேடல் எனும் சந்திரிகாவின் இந்த வஞ்சக முயற்சிக்கு-சிறீலங்கா அரசின் இனவாத நியாயத்திற்கு இந்தியா துணை போகக் கூடாது என்பதே ஈழத்தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தி.மு.க.வும் இடம் பெற்றிருப்பதால் இந்தியாவின் புதிய மத்திய அரசு, தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குச்செவிசாய்த்து விடக்கூடும்; அது நடக்காமல் செய்து விடவேண்டும் என்பதற்காகவே சந்திரிகா அவசரஅவசரமாக கதிர்காமரை டில்லிக்கு அனுப்பிவைத்திருக்கிறார் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

பொதுவாக இந்தியாவில் தேர்தல் நடந்து முடிந்து புதிய ஆட்சி பதவியேற்றதும், அது தமிழ்மக்களுக்கு நியாயமாக நடந்துகொண்டு விடக்கூடாது என்ற ஆதங்கத்தில் உடனடியாக அந்த ஆட்சியாளர்களைக்கண்டு, தான் நியாயமாகத்தான் நடந்து வருவதாய் ஆதரவுதேட முனைவது சிறீலங்கா அரசின் வாடிக்கைதான்.

அந்த வகையில் தான் சென்றமுறை சந்திரிகாவே டில்லிக்கு நேரில் வந்திருந்தார். அப்போது விடுதலைப் புலித்தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்துபேட்டி கூடத்தந்திருந்தார்.

### தி.மு.க.வை வளைக்க வஞ்சகவலை

ஆனால் பிரச்சினை பிரபாகரன்-சந்திரிகா என்ற இரு தனி மனிதர்களுடையதல்ல; அவர்களின் விருப்பு-வெறுப்புகளைப் பற்றியதுமல்ல. அது மூவாயிரமாண்டு தொடர்ச்சியான வரலாறுடைய ஈழத் தமிழினத்தின் உரிமை பற்றியதாகும்.

அந்த உரிமையைப் பிரபாகரன் என்ற தனி மனிதருடையதாக்கி, அவருக்குத் தாம் சமாதானக் கரத்தை நீட்டியதைப் போலவும், அவர் அதனை உதாசீனப்படுத்தி ஆயுத பலத்தைக் காட்ட முற்பட்டதால், தானும் ஆயுத பலத்தால் அவரை ஒடுக்கி வருவது போலவும், மற்றப்படி தமிழ் மக்களுக்குத் தாம் நல்லதே செய்வது போலவும் கதிர்காமர் மூலம் காட்டவே இந்த முறை அவரை அனுப்பியிருக்கிறார் சந்திரிகா.

ஏன்?

தி.மு.க: தமிழர்பால் கரிசனை கொண்டது. அதே நேரம் புலிகளின் நடவடிக்கையினாலேயே—அவர்களை ஆதரித்தது என்ற பெயராலேயே 1991 தேர்தலில்தோல்வியைச் சந்தித்த கட்சியுமாகும். அதனால் தமிழர் என்ற முறையில் கதிர்காமரை அனுப்பினால், தி.மு.க உட்பட மத்திய அரசைத் தம் நிலைக்கு ஆதரவாகத் திருப்பி விடமுடியும் என்ற எண்ணத்திலேயே சந்திரிகா அவரை அனுப்பியிருக்கிறார் என்பது தெளிவான உண்மையாகும்.

### கூட்டணிக்கட்சியே எதிர்க்கும் கொடுமை

உள்ளபடி சந்திரிகா தமிழர் பிரச்சினையில் தேர்தலின்போது சொன்ன சொற்களுக்கேற்ப நடந்துகொள்ளவில்லை என்பதை இலங்கைத் தமிழர் கட்சிகள் மட்டுமல்ல, சந்திரிகாவின் ஆளும் மக்கள் கூட்டணியில் இடம்பெற்றுள்ள சிங்கள அமைப்பான நவ சமசமாஜக் கட்சியே சுட்டிக்காட்டிப் பகிரங்கமாக எதிர்த்துள்ளது.

ஆகவே, இராணுவத்தின் மூலம் ஆயுத பலத்தைக் கொண்டு இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண முனைந்துள்ள சந்திரிகாவின் தற்போதைய நிலைப்பாட்டை இந்திய அரசு அடியோடு புறக்கணிக்க வேண்டும்.

### சிங்கள ராணுவ கெடுபிடிகள்

இந்தியாவின் நல்லெண்ணத்தை-இந்திய அரசின் ஆதரவை அவர் நாடுவதுஉண்மையாக இருந்தால், இலங்கையில் முதலில் தமிழ்மக்கள் சுதந்திரமாக நடமாட-சுதந்திரமாகச் செயல்பட அவர் அனுமதிக்க வேண்டும்.

தமது சொந்த மண்ணிலேயே தமிழ்மக்கள் இப்போது வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து வவுனியா போகவோ, வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம்போகவோ அங்கிருந்து மன்னாருக்கோ, மட்டக்களப்புக்கோ, திருக்கோணமலைக்கோ போகவோ அல்லது வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் தீவின் தென்பகுதிக்கும், மேற்குப் பகுதிக்கும் செல்வதென்றாலும் முன் அனுமதி பெற்று, காத்துக் கிடந்து, இராணுவத்தின்கெடுபிடிகளுக்கு ஆட்பட்டு சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் இடையேதான் முடிகிறது அனுமதி மறுக்கப்பட்டால்அதுவும் முடிவதில்லை.

### தமிழ்ப்பெண்கள் கற்பழிப்பு

எந்த நேரத்திலும் எந்தத் தமிழர் வீடும் போலீசார் அல்லது ராணுவத்தினரின் திடீர் சோதனைக்கு ஆளாவதும், சந்தேகத்தின் பேரில் அழைத்துச் செல்லப்படும் தமிழர்கள் காணாமல் போவதும் அன்றாடம் நடக்கும் காட்சியாகிவிட்டது.

சிறைப்பிடிக்கப்படும் தமிழர்கள் விசாரணையின்றியே ஆண்டுக்கணக்கில் அடைக்கப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் கொடுங்கோல் ராணுவ ஆட்சியிலும் பார்க்க மிஞ்சிவிட்டது.

பெண்களைவிசாரணைக்கு அழைத்துச் சென்றால் இரவு நேரங்களில் காவல் நிலையங்களிலோ, இராணுவமுகாம்களிலோ வைத்திருக்கக் கூடாது என்ற மாந்த நேயநியதிகூட மதிக்கப்படாமல், தமிழ்ப் பெண்கள் அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டு கற்பழிக்கப்படுவதும் வரைமுறையின்றி நடந்து வருகிறது.

### மயானபூமியான தமிழ்ப்பகுதிகள்

தமிழ்ப்பகுதிகளுக்கு உணவுப்பொருள்கள் அனுப்பப்படுவதில்லை. உயிர்காக்கும் அத்தியாவசிய மருந்துகளும் அனுப்பப்படுவதில்லை.

பெட்ரோல் போன்ற எரிபொருள்கள் எதுவுமே தமிழ்ப் பகுதிகளில் கிடையாது; தீப்பெட்டி, மெழுகுவத்திக்குக் கூட அங்கு தடைவிதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச்சொல்லத் தேவையில்லை.

இந்தத் தடைமுடைகளையெல்லாம் நீக்கிவிட்டு, அடிப்படை வசதிகளுக்கு வழிசெய்துவிட்டு அப்புறமல்லவா மற்றவற்றைப் பற்றிப் பேசவேண்டும்?

மாறாக, ஓயாத ஷெல் அடியாலும், விமானக் குண்டு வீச்சாலும் இலங்கையின் தமிழ்ப் பகுதியே மயானபூமியாக இருக்கிறது. குடியிருப்புக்கள், வழிபடுமிடங்கள், கல்விச்சாலைகள், மருத்துவ மனைகள் அனைத்துமே அழிந்து கிடக்கின்றன.

### இந்திய ஆதரவு முதலீடு!

விவசாயமும், மீன்பிடியும் நடைபெறாததால் தமிழ்மக்கள் சொந்த ஊர்களிலேயே அகதிகளாக அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தலைநகர் கொழும்பிலோ தமிழர்கள் என்றாலே வேட்டையாடப்படும் மிருகங்களைப் போலத்தான் நடத்தப்படுகின்றனர். எந்தநேரத்தில் எவருக்கு எது நேரும் என்று தெரியாத நிலை.

இதையெல்லாம் தீர்க்காமல் இந்திய ஆதரவைக் கோருவது என்பது, உலகைஏமாற்றுவதற்கான முதலீடாக அதனைப் பயன்படுத்தவே தவிர, வேறல்ல.

எனவே, இந்திய-இலங்கை உடன்பாட்டின் அடிப்படையில் தமிழர்களுக்குத் தர ஒப்புக்கொண்டதை முதலில் கொடுத்து விட்டு, பிறகு இந்தியாவுடன் பேச வாருங்கள் என்று, சிறீலங்காவுக்கு இந்திய அரசு பதிலளிப்பதே பொருத்தமாக இருக்கும்.

எப்படியிருந்தாலும் தனது அநியாயங்களுக்கு உலக ஒப்புதலைப்பெற இந்தியாவின் கரிசனை சிறீலங்காவுக்கு முதலீடாகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதே இலங்கைத் தமிழ்மக்கள் இந்தியாவிடம் வைக்கும் வேண்டுகோளாகும்.

கதிர்காமரின் விஜயமும் இதற்கு விலக்காக இருக்க முடியாது.

பிரச்சாரத்திற்கு மாறாக

# இடம் பெயர்ந்த அகதிகள் உணவின்றி அவதி

இடம்பெயர்ந்து வன்னிப் பகுதியில் வசிக்கும் வடபகுதி மக்களுக்கு கடந்த சில வாரங்களாக உணவு நிவாரணம் வழங்கப்படவில்லையென அறியப்படுகின்றது. அவர்களுக்கு துரிதமாக உணவுப் பொருள்களை அனுப்பிவைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் பட்டினிச் சாவையே எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று நவசமாஜக் கட்சி, ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இடம் பெயர்ந்து வன்னிப் பகுதியில் குறிப்பாக, கிளிநொச்சி முல்லைத் தீவு மாவட்டங்களில் தங்கியுள்ள பல அகதிகளுக்கு கடந்த சில வாரங்களாக உணவு நிவாரணம் வழங்கப்படவில்லையென அறியப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அகதிகள் இறுதியில் வந்து சேர்ந்தபடியாலேயே நிவாரணம் வழங்கப்படவில்லையென காரணம் கூறப்பட்டுள்ளது. இதேபோல் திருகோணமலைப் பகுதியிலும் பலருக்கு நிவாரணம் கிட்டவில்லையென்றும் அறிகிறோம். நிவாரணம் மறுக்கப்பட்ட மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் அபாயம் இருக்கிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்கள் விடுத்த அவசர வேண்டுகோளுக்கு பாதுகாப்பு அதிகாரிகள் செவிசாய்க்கவில்லையென அறியப்படுகிறது. பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் எண்ணிக்கை போன்ற விபரங்கள் அறியப்பட்ட பின்னரே இவ்விடயம் ஆராயப்படும் எனவும் அவர்கள் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் எனவும் பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனராம்.

பாதுகாப்பு அதிகாரிகள் தன்னிச்சையாகவும், அல்லலுறும் அகதிகளின் அவல நிலையை உணராத விதத்திலும் செயற்படுகிறார்கள் போல் தெரிகிறது. மறுபுறத்தில் வடக்கு-கிழக்கு மக்களுக்கு போதிய உணவு வசதிகள் வழங்கப்படுவது மட்டுமல்லாமல் வேறு வழிகளிலும் அவர்கள் நன்றாகக் கவனிக்கப்படுகிறார்கள் எனவும், குறிப்பாக யாழ் மாவட்டத்திற்கு ஏராளமான உணவு வகைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் வானொலி தொலைக்காட்சி மற்றும் சில பத்திரிகைகள் வாயிலாகவும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் உண்மையான நிலையானது இதற்கு அதிகம் மாறுபட்டதாகவே உள்ளது.

இவ்வளவு நீண்டகாலமாக எவ்வளவோ துன்பு துயரங்களை அனுபவித்து வந்துள்ள மக்கள் உயிரை மட்டும் தக்க வைத்துக் கொள்வதற்கு இன்றியமையாததாகிய உணவு நிவாரணத்தினை வழங்க மறுப்பது இனக்கொலைச் செயற்பாட்டுக் ஒரு பகுதியே என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இவ்வாறான சூழ்நிலையைக் கவனத்தில் எடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய உணவு நிவாரணம் முதலியவற்றை மேலும் தாமதமின்றி வழங்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



### தில்லியில் அரசு மாறியும்

# இலங்கை இனப்பிரச்சினையில் இந்திய கொள்கை மாறுவதாயில்லை

### பி.பி.சி.யின் ஆய்வுரைக் கண்ணோட்டம்

இலங்கையில் 13 ஆண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இலங்கை அரசு ஆதரிக்கும் கொள்கையை இந்தியா மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளுக்கு இதுவரை இந்திய அரசிடம் இருந்து பதில் எதுவும் வரவில்லை. தற்போதைய நாடாளுமன்றத்தில் இலங்கையின் தமிழ்ச் சிறுபான்மையினரின் மொழியையும், பண்பாட்டையுமே தமதாகக் கொண்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 39 உறுப்பினர்களின் ஆதரவு புதிய இந்திய அரசுக்கு உயிர் பிழைத்து இருக்கவே தேவையாக இருப்பினும், முன்னைய காங்கிரஸ் அரசு கொண்ட நிலைப்பாட்டை தற்போதைய அரசு குறிப்பிடத்தக்க மாற்றம் செய்யும் என்று தெரியவில்லை என்று பி.பி.சி. தனது ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் கூறியுள்ளது.

மத்தியில் புதிய அரசாங்கம் பதவி ஏற்றதும் அண்டை நாடான இலங்கையில் நடக்கும் இனக் கிளர்ச்சிக்கு அரசியல் தீர்வு ஒன்றை கண்டு பிடிக்க உதவ வேண்டுமென இந்திய அரசாங்கத்தைத் தான் வற்புறுத்தப் போவதாக மாநிலச் சட்டமன்றத்தில் கடந்த வாரம் தமிழ் நாட்டின் புதிய அரசின் தலைமை அமைச்சரான கருணாநிதி அவர்கள் அறிவித்தார். கருணாநிதி அவர்கள் இப்போது அதிகாரத்தில் இருப்பதால் தங்கள் நாட்டில் நடக்கும் போரை நிறுத்தவும், இந்திய அரசாங்கத்தில் இருக்கும் தனது தோழமைக் கட்சிகளைத் தன்னால் வற்புறுத்த முடியும் என்று எல்.ரி.ரி.ஈ. மட்டுமின்றி, கூட்டாக வெளியிட்டு அறிக்கையொன்றில் வேறு ஐந்து தமிழ்க் குழுக்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

#### தி.மு.க.வின் நிலைப்பாடு

ஆனால் கருணாநிதி அவர்கள் அவசரப்பட்டு இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளமாட்டார் என்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள். 1991-ல் தமிழ் நாட்டில் முன்னாள் இந்தியத் தலைமை அமைச்சர் ராஜீவ்காந்தி அவர்கள் எல்ரிரிஈ மனிதக் குண்டு என்றுசந்தேகப்படும்ஒருவரால் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து எல்ரிரிஈ இடத்திலும் ஈழத் தமிழர் பற்றிய நலத்திலும் தமிழ் நாட்டு மக்களைப் பொறுத்தவரை முழுமையான அக்கறை இல்லாது முறிந்தது அவர்களுக்குத் தெரியும்.

மாநிலத்தில் எல்ரிரிஈ நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்தது என்ற குற்றச் சாட்டின்பேரில்கருணாநிதியின் 2 ஆண்டு கால அரசு 1991-ல் பதவி நீக்கம் செய்யப்பட்டது. எல்ரிரிஈ-யிடம் தமக்கு அனுதாபம் இருப்பதாகக் கூறப்படுவதால் தான் இதற்கு அடுத்து வந்த தேர்தலில் ஒட்டு மொத்தமாகத் தமது கட்சி தோற்றுப் போய் இரண்டே இரண்டு இடங்களைத்தான் வெல்ல முடிந்தது என்பது கருணாநிதி கருத்தாகும். அண்மையில் நடந்த தேர்தலில்கூட அவரது அரசியல் எதிரியான ஜெயலலிதா தேர்தல் பிரசாரத்தின் வலுவானகருத்து என்னவென்றால், அவர் ராஜீவ் காந்தி அவர்களைக் கொன்றவர் எனக் கூறப்படுபவரின் ஆதரவாளர் என்பதே.

#### எல்,ரி.ரி.க்கு எதிரான நிலை

எல்ரிரிஈ மீது தி.மு.க கொண்ட அநுதாபமே அந்தக் கட்சியுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்ளாததன் காரணம்என்று காங்கிரஸ்கட்சியும் கூறியது. இதனால் எல்ரிரிஈ சார்புடையது என சூத்தப்பட்ட முத்திரையை விட்டுத் தன்னை வெகுதூரம் விலக்கிக் கொள்ளும்முயற்சியாக வெளிப்படையாக இலங்கை போராளிகளுக்கு ஆதரவு அளித்திருந்த தமது கட்சியின் முக்கியமான உறுப்பினரை அதாவது வை. கோபால்சாமி அவர்களைக் கட்சியைவிட்டே நீக்கினார். கட்சி இரண்டாகப் பிளவு பட்டது. ஆதலால் கருணாநிதி அவர்கள் இப்பொழுது எச்சரிக்கையுடன் தான் இருப்பார் என்று பார்வையாளர்கள்கருதுகிறார்கள்.

கருணாநிதி அவர்கள் எல்ரிரிச-க்கு எதிரான நிலையில் இருப்பதைக் குறித்து எல்ரிரிஈயும் அவர்களின் வேண்டுகோளில் தங்களின் கவலையைத் தெரிவித்துக் கொண்டார்கள். தங்களின் போராளித் தமிழ்க் குழுவொன்றின் அதாவது ஈ பி.ஆர்.எல்.எப். ஆதரவாளர்கள் 11பேரை 1990-ல் சென்னையில் எல்ரிரிஈ கொன்றதை அடுத்து எல்ரிரிஈயுடன் தனக்கு இருந்த அனுதாபத்தை நிறுத்திக் கொண்டதாகப் பல முறை கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

#### சாதகமற்ற சூழ்நிலை

இலங்கைத் தமிழர் பிரச்சினை, தேர்தல் பிரச்சினையாக இல்லை என்றாலும் எல்ரிரிஈ-க்கு வெளிப்படையாக ஆதரவு அளித்து வரும் ம.தி.மு.க. கடந்த தேர்தலில் ஒரு இடத்தைக் கூட வெல்லமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தங்கள் இனச் சகோதரர்கள் தாக்கப்படுவது குறித்து இந்தியாவிலுள்ள தமிழர்களுக்குக் கொஞ்சம் கூட அக்கறை இல்லையென்பதையே இது சுட்டிக் காட்டுகிறது.

புதிய இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் பதவியில் நீடித்து இருப்பதைக் குறித்தே கவலையுடன் இருக்கும் நிலையில், இந்த விசயத்தில் கொள்கை அடிப்படையில் மாற்றம் எதுவும் செய்து விடப் போவதில்லை. காஷ்மீரின் பிரிவினை வாத, தீவிரவாதக் குழுக்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் எல்ரிரிஈ-யை இந்தியாவால் ஒரு போதும் ஆதரிக்க முடியாது.

எல்.ரி.ரி.ஈ-யிடம் கனிவு காண்பித்தால், காங்கிரஸ் கட்சி எதிர்க்கும். ஏன் என்றால் அப்படிச் செய்வது ராஜீவ்காந்தியின் விதவை சோனியா அவர்களைப் புண்படுத்துவதாக அமையும் என்று காங்கிரஸ்கருதக்கூடும். தேவகவுடா அவர்களின் புதிய அரசை ஆதரிக்கும் கம்யூனிஸ்டுகள், அதாவது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுகள்பிரிவினைவாதக் கொள்கைகளை ஆதரிப்பதாக இல்லை. காங்கிரசிலிருந்து பிரிந்து சென்ற தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியும், எல்ரிரிஈ-க்கு எதிரான நிலையைக் கொண்டுள்ள கட்சியாகும். இந்தக் கட்சி நாடாளுமன்றத்தில் 20 இடங்களை வென்றது. யாழ்ப்பாணத்தில் தங்களுடைய வலிமையான இடத்தை இழந்த பிறகு போரில் பல பின்னடைவுகளைச் சந்திக்கும் எல்ரி.ரி ஈ.யினர் சமரசத்துக்கான விரக்தி அடைந்த முயற்சி ஒன்றைசெய்துஇருக்கிறார்கள் ஆனால் இப்பொழுது உள்ள அரசியல் சூழ்நிலையும் இந்திய மக்களின் மனநிலையும் இதை ஏற்றுக் கொள்ள இன்னும் தயாராக இல்லை.

-இவ்வாறு பி பி.சி. தனது ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் கூறியுள்ளது.

## ஈழ அகதி மாணவர்கள் கவனத்திற்கு

கடந்த 1991-ஆம் ஆண்டில் இருந்து 1999-ஆம் ஆண்டு வரைக்குமான 5 ஆண்டு காலப் பகுதியில் 12-ஆம் தரத் தேர்வை எழுதிவிட்டு கல்லூரி அனுமதி பாதிக்கப்பட்டமையால், பாதிக்கப்பட்டு பட்டப்படிப்பிற்கு தேர்வாகாமல் உள்ள ஈழ அகதி மாணவர்களே !

ஈழத் தமிழர் பால் பற்றும் பாசமும் மிக்க தமிழக முதல்வர் மாண்புமிகு திரு மு. கருணாநிதி மற்றும் கல்வியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் ஆகியோரின் கனிந்த நடவடிக்கையால் கடந்த 5 ஆண்டு காலமாக உயர் கல்வியில் ஈழ அகதிகளுக்கு நேர்ந்த பாதிப்புக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. அதாவது ஈழத்தமிழ் அகதி மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்து கற்பதற்கு கடந்த ஆட்சிக் காலத்தில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு விட்டது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

எனவே கல்லூரி அனுமதித் தடை காரணமாக, கல்லூரிகளில் சேர முடியாமல் இருந்த ஈழ அகதிகள் உடன் அருகிலுள்ள கல்லூரி அதிபர்களை அணுகித் தடை நீக்கத்தைத் தெளிவுறுத்தியும் கல்லூரி அனுமதி மறுக்கப்பட்டால் தங்களின் 12-ஆம் வகுப்புப் பெறுபேற்றுச் சான்றின் நகலுடன் உங்கள் பெயர் முகவரி, உள்ளிட்ட தெளிவான விபரங்களுடன் கீழ்க் காணும் முகவரிக்கு எம் உடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் கல்லூரி அதிபர்களுடன் தாங்கள் கொண்ட தொடர்பு பற்றிய இடம் கிடைத்தவர்கள்-கிடைக்காதவர்கள் அனைவரும் தம் முழுவிவரங்களையும் எமக்கு அனுப்பிவைத்திட வேண்டுகிறோம்.

இப்படிக்கு,<br>
சி. சூரியகுமாரி<br>
செயலாளர்.<br>
24—6—96

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-<br>
ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்<br>
இல, 14, சேட் குடியிருப்பு,<br>
3-வது மாடி, முதலாம் தெரு,<br>
எழும்பூர், சென்னை-600008,<br>
தொலைபேசி: 8261063.

#### இரட்டையர் படையெடுப்பு

பிரிட்டன் மருத்துவ நிபுணர்கள், மரபு வழி மருத்துவ ஆராய்ச்சிக்கென 35 வயதுக்கு மேலான இரட்டையர்களாக இருப்பவர்கள் சிலரை 'வரலாம்' என அறிவித்திருந்தது; ஆயிரத்திற்கு மேலான இரட்டையர்கள் அதிலும் குறிப்பாகப்பெண் இரட்டையர்கள், ஒவ்வொரு ஜோடியினரும் ஒவ்வொரு வண்ண உடையோடு வந்து குவிந்ததைக் கண்டு மருத்துவர்களே பிரமித்துப் போனார்களாம்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

1991-க்குப் பிறகு இந்த ஒதுக்கீடு மறுக்கப்பட்டு மீண்டும் சில ஆண்டுகளுக்குப் பிறகு தொடக்கக் கல்விக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தற்போது ஈழ அகதிகள் மறுவாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த சந்திரஹாசன், தன் அமைப்பின் சார்பில் 26-5-96 அன்று அரசுக்குக் கொடுத்த மனுவில் இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களுக்கும், இலங்கை மாணவர்களுக்கும் 1991-ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்டு வந்த கல்விச் சலுகைகளை மீண்டும் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முந்தைய ஆட்சியிலே நிறுத்திவைக்கப்பட்டிருந்த இந்தச் சலுகை மீண்டும் தொழிற் கல்வி உட்பட வழங்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்.

இவ்வாறு தமிழக அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

Edited Printed and Published by ABUNACHALAM GOPALAN, No 14, Salt Colony, Ist Street, IIIrd Floor, Egmore, Madras-60008.
Printed at Kuralnery Achagam, Madras-94.

## சனநாயகம்-சமதர்மம்-சமயசார்பின்மை-நமது பாதை

படிப்பகம்